விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 126 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 10 செவ்வாய்க்கிழமை (23.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

18.03.2024 அன்று வெளியான ஆசிரியர் தலையங்கம் வாசகர்களுக்காக மீளவும் பிரசுரிக்கப்படுகிறது.

## வடக்கின் ஆளுநருக்கு ஓர் அவசர மடல்

வடக்கு மாகாண ஆளுநர் அவர்களுக்கு அன்பு வணக்கம். வடக்கு மாகாணத்தின் சமகால நிர்வாகம் மிக மோசமாகி வருவதன் காரணமாக இக்கடிதத்தை தங்களுக்கு அவசரமாக எழுதுகின்றோம்.

வடக்கின் ஆளுநராக ஒரு தமிழர் இருக்க வேண்டும் என நம் தமிழ் அரசியல்வாதிகள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, தங்களுக்கு இச்சந்தர்ப்பம் கிடைத்ததென்பதைத் தாங்கள் மறுக்கமாட்டீர்கள் என நம்புகின்றோம்.

உண்மையில் சிங்களவர் ஒருவர் வடக்கின் ஆளுநராக இருந்தால், அவர் தனது சேவையைச் சீராக வழங்க வேண்டும் என நினைத்து அர்ப்பணிப்போடு செயலாற்றியிருப்பார்.

தவிர, ஆளும் தரப்புடனும் அவர் இறுக்கமாக கலந்துரையாடி, வடக்கு மாகாணத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பார்.

என்ன செய்வது காலப் பிழை போல வடக்கு மாகாணத்தின் ஆளுநராகத் தமிழர் ஒருவர் இருக்க வேண்டும் எனக் கேட்டு, எங்கள் தலையில் நாங்களே மண்ணை அள்ளிக் கொட்டிவிட்டோம்.

உண்மை. ஏற்கெனவே வடக்கின் ஆளுநராக இருந்த சுரேன் ராகவன், ஜீவன் தியாகராஜா போன்றவர்கள் வடக்கு மக்களுக்காக எதனையும் செய்யவில்லை.

மாறாக, வடக்கின் நிர்வாகத்தைக் குழப்பியதுடன் ஆட்சியாளர்களுக்கு விசுவாசமாக செயற்படுவதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

உதாரணத்துக்கு; யாழ்ப்பாணம் ஆரியகுளம் திறப்பு விழாவின்போது அப்போது ஆளுநராக இருந்த ஜீவன் தியாகராஜா பௌத்தத்தை முதன்மைப்படுத்துவதில் தீவிரமாக இருந்ததுடன் அந்த நிகழ்வில் அவர் தன்னை ஒரு சிங்களவர் போல உடையணிந்து அடையாளப்படுத்தியிருந்தார்.

ஆக, வடக்கின் ஆளுநராக தமிழர் இருப்பது எந்தவகையிலும் ஆரோக்கியமானதல்ல என்பதுதான் நம் தாழ்மையான கருத்து.

இதனை நாம் கூறும்போது, கிழக்கில் செந்தில் தொண்டமான் ஆளுநராக இருந்து துணிவோடும் நேர்மையாகவும் சேவையாற்றுகிறார் என்பதையும் இங்கு நாம் சுட்டிக்காட்ட வேண்டும்.

இல்லையேல் எமது கருத்து விமர்சனத்துக்கு உட்பட வாய்ப்புண்டு.

இஃது ஒருபுறமிருக்க, சமகாலத்தில் வடக்கின் ஆளுநராக இருக்கும் தாங்கள் சில அமைச்சுக்களின் செயலாளர்கள் தொடர்பில் அவர்களின் எழுந்தமானமான நடவடிக்கைகளுக்கு அனுமதி கொடுப்பதாகவும் இதனால் குறிப்பிட்ட அமைச்சுக்களுக்குட்பட்ட நிர்வாகங்கள் அனைத்தும் குழம்பிக்கிடப்பதாகவும் பொதுமக்களும் அரச பணியாளர்களும் பரவலாகப் பேசிக் கொள்கின்றனர்.

தவிர, சில அமைச்சின் செயலாளர்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதாகவும் தமக்குக் கீழ் பணியாற்றும் அதிகாரிகளை அவர்கள் மதிப்பதில்லை எனவும் அவர்களுக்குரிய அதிகாரங்களை வழங்காமல் தலையீடு செய்வதாகவும் பரவலாகப் பேசப்படுகிறது.

எனவே இது விடயத்தில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதுதான் பொதுமக்களின் கருத்தாக உள்ளது.

### வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்துக்கு எதிராக

# வட மாகாண ஆளுநர் பொலிஸில் முறைப்பாடு

## பிரதம ஆசிரியரிடம் பொலிஸார் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

வலம்புரி நாளிதழின் பிரதம ஆசிரியருக்கு எதிராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாடு தொடர்பாக நேற்று (22.04.2024) யாழ்ப்பாணப் பொலிஸார் பிரதம ஆசிரியரிடம் இருந்து வாக்குமூலத்தைப் பெற்றுக் கொண்டனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# ஆளுநரின் பொலிஸ் முறைப்பாடு கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரானது

## வலம்புரியின் பிரதம ஆசிரியர் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

வலம்புரி நாளிதழில் கடந்த 18.03.2024 அன்று வெளிவந்த ஆசிரியர் தலையங்கத்துக்கு எதிராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாடு கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரானது.

இத்தகைய முறைப்பாடுகள் ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதாக அமையக்கூடியது என வலம்புரி பிரதம ஆசிரியர் நல்லையா விஜயசுந்தரம் பொலிஸாருக்கு வழங்கிய தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது ஆளுநரின் பிரதிநிதியாக யாழ். 15

## மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

### ஒருவர் பலி; வவுனியாவில் சம்பவம்



(வவுனியா)

வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் மூன்று வாகனங் 15

### இரத்தம் தோய்ந்த நிலையில்

## விசுவமடுவில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)

இரத்தம் தோய்ந்த நிலையில் விசுவமடுவில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

02

## வலம்புரி ஆசிரியரிடம் பொலிஸ் விசாரணை ஊடகச் சுதந்திரத்தை நெரிக்கின்றது

### யாழ்.ஊடக அமையம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் முன்னணி நாளிதழ்களுள் ஒன்றான வலம்புரி நாளிதழின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வடக்கு ஆளுநரின் முறைப்பாட்டின் பேரில் நேற்று திங்கட்கிழமை பொலிஸ் விசாரணைக்குள்ளாக்கப்பட்டமை தொடர்பில் யாழ்.ஊடக அமையம் தனது வன்மையான கண்ட 15

## சீரணி தாய்க்கு இன்று தேர்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாளின் இரதோற்சவம் இன்றாகும்.

காலை 9 மணிக்கு வசந்த 15

## உரும்பிராயில் வீதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 02

### வவுனியா வைத்தியசாலையில்

## குளியலறையில் தவறிவீழ்ந்த கர்ப்பவதித் தாய், சிசு மரணம்

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையின் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த கர்ப்பவதித் தாய் குளியலறையில் தவறி வீழ்ந்து உயிரிழந்த நிலையில், அவரது வயிற்றில் இருந்த சிசுவும் மரணமடைந்துள்ளது.

இந்த துயரச் சம்பவம் 02

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் குழுக்களை அமைக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை

## அமைச்சர் டிரான் அலஸ்

சமூக பொலிஸ் குழுக்களை அமைக்காத அதிகாரிகள் மீது மே 31ஆம் திகதிக்குள் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமூக பொலிஸ் குழு தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் சமூக பொலிஸ் குழுக்களை நியமிப்பதன் உண்மையான நோக்கம் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு மக்களை ஒன்று சேர்ப்பதாகும் என அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, குறித்த நிகழ்வில் கலந்துகொண்ட பொலிஸ் மா அதிபர் தேஸபந்து தென்னகோன், இந்த சமூக பொலிஸ் குழுக்களை ஸ்தாபிப்பதன் ஊடாக தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆதரவை கிராம மட்டத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார்.

மேலும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நல்ல குழுவை அமைக்க அறிவுறுத்தியுள்ளதாகவும், இலங்கையில் உள்ள 14,022 கிராம அதிகாரிகளும் இந்த குழு முறையை ஏற்றுக்கொள்ள விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7,10)

# அரசியல் கைக்கூலிகளாக புலனாய்வு அமைப்புகள் இருக்கக் கூடாது -சம்பிக்க



(கொழும்பு)

பொலிஸாரும் புலனாய்வு அமைப்புகளும் அரசியலில் கைக்கூலிகளாக இருக்கக் கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் அந்தோனியார் பேராலயத்தில் இடம் பெற்ற விசேட நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் ஏனைய புலனாய்வுத் திணைக்களங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர் அரசாங்கத்தின் கைக்கூலிகளாக மாறுவது பிரச்சினைக்குரிய விடயம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக தேசிய பாதுகாப்பு தொடர்பான தகவல் சேகரிப்பு நிறுத்தப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மேலும் இவ்வாறானதொரு சூழ்நிலையில், பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸ், புலனாய்வு அமைப்புகள் மற்றும் ஏனைய புலனாய்வு அதிகாரிகள் சுயாதீனமாக செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7,10)

# நெடுந்தீவில் விடுதி ஒன்றினுள் மதுபான விற்பனை நிலையம்

## எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்




யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் அமைந்துள்ள விடுதி ஒன்றினுள் மதுபான விற்பனை நிலையம் ஒன்றினை திறப்பதற்கு பிரதேச மக்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

நேற்றுக் காலை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு பதாகைகளை தாங்கியவாறு கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

நெடுந்தீவு பகுதியில் பல்வேறு அபிவிருத்தி வேலை திட்டங்கள் முன்னெடுக்க வேண்டிய நிலையில் மதுபான விற்பனை நிலையத்தை கொண்டு வருவதால் இளம் சந்ததியினர் வழி தவறிப் போகக்கூடும் என்பதை கருத்தில் கொண்டு பிரதேச மக்களால் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நெடுந்தீவு சந்தியிலிருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்டம், ஊர்வலமாகச் சென்று நெடுந்தீவு பிரதேச செயலரிடம் மகஜறொன்றை கையளித்த பின்னர் அரசாங்க அதிபருடன் பேசி குறித்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக பிரதேச செயலர் தெரிவித்ததையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (ம-7,10,33)

## உரும்பிராயில்...

இதில் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த நாகமுத்து பிரேம்தாஸ் (வயது- 63) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை(21) பிற்பகல் 3.30 மணியளவில் உரும்பிராய் இந்து கல்லூரிக்கு அருகாமையில் உள்ள வர்த்தக நிலையத்தில் பொருட்களை வாங்கிக் கொண்டு வீதியை கடந்த போது பலாலி பக்கம் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் அவரை மோதித் தள்ளியது.

இதில் படுகாயங்களுக்கு உள்ளானவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று திங்கட்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இம் மரணம்தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,10,60)

# மரண அறிவித்தல்

## கிறிஸ்தோப்பர் அந்தோனியாப்பிள்ளை



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கிறிஸ்தோப்பர் அந்தோனியாப்பிள்ளை அவர்கள் கடந்த 21.04.2024 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அலேசிப்பிள்ளை - பிலுப்பாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிறிஸ்தோப்பரின் பாசமிகு மனைவியும் அன்னம்மா, எலிசபேத்தம்மா, யேசுதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மேரி றோஸ்மலர், மேரி ராஜேஸ்வரி, கிறிஸ்ரி றோபேட், மேரி சந்திரா, மேரி திரேசா, மேரி யசிந்தா, கிறிஸ்ரி ஜோர்ஜ், மேரி கிறிஸ்ரா, மேரி சகிலா சுதந்தினி, காலஞ்சென்ற கிறிஸ்ரி வின்சென்ற் மற்றும் மேரி லதாமெலானி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜேயரட்ணம், துரைநாயகம், ஜிம்மா சறோ, பிரேமநாயகம், ஜெயச்சந்திரன், யஸ்ரீனா, பானுராஜ், றங்கன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் றொஷானி, றொஷான் காலஞ்சென்ற றொகான் மற்றும் வேஜினி, றொபின், வொட்சன், தர்ஷன், றெமி, சிந்தியா, அகில், திபுசியஸ், தர்ஷிகா, அனந்தன், ஹரன், நிலுஷிகா, ஜெவானி, மார்க், மைக், ஜெய், ஜரோன், அஞ்சலி, றஷான், கஜன், கிறிஷா, றெபேக்கா, ஜொனார்த்தன், ஜொகர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தெபோரா, ஷெனாலி, ஷானு, செறின், சாரா, கிஷோர், றொகானா, அர்ச்சனா, சஞ்சனா, கிறிஸ்டன், கியோன், மெத்தியூ, கெலேனா, லூரக்காஸ், ஜெசிக்கா, அவிலா, தாவுத், யாக்கோப், ஈசாக், யோசுவா, லியா, ஜொயல், லியோனன் ஆகியோரின் பூட்டியும் லெயானாவின் கொல்லுப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 24.04.2024 புதன்கிழமை 17/24, புனித அன்னம்மாள் ஒழுங்கை சுண்டிக்குளியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து காலை 9.00 மணியளவில் இறுதித் திருப்பலிக்காக பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 458 5918 (538)

## விஜயதாசவின் அமைச்சுப் பதவி பறிப்பு?

# கட்சி உறுப்புரிமை நீக்கப்படும்

## பொதுஜன பெரமுன எச்சரிக்கை

விஜயதாச ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை பாரதூரமான விடயம் என்பதுடன் அவர் கட்சி உறுப்புரிமை மற்றும் அமைச்சுப் பதவி ஆகியவற்றையும் இழக்க நேரிடும் என பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கின்ற நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டமை பாரதூரமான விடயமாகும்.

கட்சி என்ற ரீதியில் இதற்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுப்போம். விஜயதாச ராஜபக்ஷ கட்சி உறுப்புரிமையை இழக்கும் நிலையும் காணப்படுகின்றது.

இந்த நாட்டின் நீதி மற்றும் சட்டம் தொடர்பாக நன்றாக தெரிந்த விஜயதாச ராஜபக்ஷ போன்ற ஒருவர் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி வகித்து வருகின்ற நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளது பாரதூரமான என அவர் நன்கு அறியக்கூடும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியலமைப்பின் பிரகாரம் கட்சியில் அங்கம் வகிக்கும் ஒருவர் பிறிதொரு கட்சியின் அங்கத்துவத்தை பெறும் பட்சத்தில் அவரது கட்சி உறுப்புரிமை நீக்கப்படும் என்றார். (ம-7,10)

## குளியலறை...

தொடர்பாக மேலும் தெரியவருகையில், மதவாச்சி பகுதியைச் சேர்ந்த நிறைமாத கர்ப்பிணித்தாய் ஒருவர் வவுனியா வைத்தியசாலையின் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் நேற்று திங்கட்கிழமை (22) விடுதியில் உள்ள குளியலறைக்கு சென்றநிலையில் தவறி வீழ்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்நிலையில் அவர் மீட்கப்பட்டு அவரது வயிற்றில் உள்ள குழந்தையை காப்பாற்றுவதற்கான சத்திரசிகிச்சையினை வைத்தியர்கள் மேற்கொண்டனர்.

எனினும் வயிற்றில் இருந்த சிசுவும் உயிரிழந்துள்ளது உயிரிழந்தவர்களின் சடலங்கள் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,10,250)

## விசுவமடுவில்...

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு 10 ஆம் கட்டை பகுதியில் தனிமையில் வசித்து வந்த 57 வயதுடைய கிருஷ்ணன் கிருஷ்ணராசா என்னும் ஐந்து பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு இரத்தம் தோய்ந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இறந்தவரின் சடலம்பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

உயிரிழப்பு கொலையா அல்லது இயற்கை மரணமா என பல்வேறு கோணங்களில் புதுகுடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருளினால் பாரிய இலாபமீட்டும் அரசாங்கம்

### சம்பிக்க சாடல்



(கொழும்பு)


எரிபொருளின் மூலம் அரசாங்கம் பாரிய இலாபத்தை ஈட்டி வருவதாக ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, டீசல் விலையானது தொழிற் துறைகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும், பொருளாதார வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணம் என தெரிவித்த அவர், குறைந்தபட்சம் டீசல் விலையையாவது குறைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

மின்சாரம் மற்றும் பெற்றோலியம் ஆகிய துறைகள் இலாபம் ஈட்டக்கூடியவையாக இருப்பதால் அதற்கான நன்மைகளை நிறுவனங்களுக்கு வழங்குவதே பொருத்தமானது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கைத்தொழில் துறையில் மின்சார பாவனை தொடர்பில் அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை எடுக்க வேண்டுமெனவும், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு தொழில்கள் பேணப்பட வேண்டும் எனவும் அதற்கு அதிக மின்சாரக் கட்டணம் தடைகளை ஏற்படுத்துவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-6)



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

## போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள்;

# பொலிஸாருக்கு இறுக்கமாகும் சட்டங்கள்

**(கொழும்பு)**

**போதைப்பொருள் கடத்தல் மற்றும் குற்றவாளிகளுடன் தொடர்பு வைத்திருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் கடுமையான சட்டம் நடைமுறைபடுத்தப்படும் என பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.**

நுவரெலியாவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யுக்திய நடவடிக்கையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களை அடுத்த மாதத்திற்குள் அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் புத்தளம் மாவட்டத்தில் அதற்கான விசேட இடம் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)



## டெங்கு உயிரிழப்பு அதிகரிப்பு

### தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு

(கொழும்பு)

நாட்டில் இந்த ஆண்டில் மேலும் ஒரு டெங்கு உயிரிழப்பு பதிவாகியுள்ளது. அதன்படி, டெங்கு உயிரிழப்புகளின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் இந்த ஆண்டில் இது வரை 21 ஆயிரத்து 453 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 4 ஆயிரத்து 608 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு டெங்கு நுளம்பு பரவும் ஆபத்தான வலயங்களாக அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி-6)

## இந்திய அதிகாரிகளை சந்திக்க மைத்திரி மீண்டும் முயற்சி

(கொழும்பு)

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாய்லாந்தில் உள்ள தமது நண்பரான இரத்தினக்கல் வர்த்தகர் முகமது அக்ரமின் அழைப்பிலேயே தாய்லாந்திற்கு தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதன்போது, மைத்திரிபால இலங்கையில் இல்லாத நேரத்தில், அவரின் உதவியாளர்கள் என தங்களை வர்ணித்துக் கொள்ளும் இரண்டு பேர் முன்னாள் ஜனாதிபதிசார்பாக இந்திய இராஜதந்திரிகளுக்கு குறுஞ் செய்திகளை அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த குறுஞ்செய்திகள் சந்திப்புக்களை நடத்துவதற்கும், அவற்றை நடத்துவது சாத்தியமா என்பதை உறுதி செய்வதற்குமானவை என்றும் அறியப்படுகிறது.

எனினும் இந்த சந்திப்புகளுக்கு மைத்திரி ஒப்புதல் அளித்தாரா என்பது தொடர்பில் உடனடியாகத் தெரியவில்லை என ஆங்கில செய்தித்தாள் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, அந்த குறுஞ் செய்திகளுக்கு இந்திய தரப்பின் பதில் என்னவென்பதையும் ஆங்கில செய்தித்தாள் குறிப்பிடவில்லை.

இந்நிலையில், முன்னதாக, உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல்களுக்கு பின்னணியில் இந்தியா செயற்பட்டதாக மைத்திரிபால இலங்கையின் குற்றப்புலனாய்வுத் துறையிடம் முறையிட்டுள்ளார் என்ற தகவல்களின் மத்தியிலேயே இந்த குறுஞ் செய்தி தகவலும் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தே.அ. அட்டைக்கான விண்ணப்ப முடிவுத்திகதி நீடிப்பு


(கொழும்பு)

தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியாத 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான கால அவகாசம் ஜூன் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இதுவரை அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள முடியாதவர்களுக்காகவே இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் ஜி.பிரதீப் சபுதந்திரி தெரிவித்தார்.

மேலும் அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கை கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

பிரதேச செயலாளர்கள் காலத்தை நீடிக்குமாறு விடுத்த கோரிக்கைகளை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆட்பதிவு ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-6)



பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

மே.11,12.2024.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஐ.பி.எல் கொண்டாட்டம் 2024
மார்ச் - மே

# ஜெய்ஸ்வால் 'நூறு' ராஜஸ்தான் 'ஜோரு'

## லேசாக வீழ்ந்தது மும்பை





மும்பைக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் ஜெய்ஸ்வால் சதம் கடந்து கைகொடுக்க ராஜஸ்தான் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியா சத்தில் வெற்றி பெற்றது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17ஆவது சீசன் நடக்கிறது.

ஜெய்ப்பூரில் நடந்த லீக் போட்டியில் மும்பை - ராஜஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப் பெடுத்தாடிய மும்பை அணிக்கு ரோகித் சர்மா (6), இஷான் கிஷான் (0), சூர்யகுமார் (10) ஏமாற்றி னர். மொஹமட் நபி (23) ஆறுதலளித்தார். சகால் பந்தை சிக்சருக்கு அனுப்பிய திலக் வர்மா 38 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். நேஹால் வதேரா (49) ஓரளவு கைகொடுத் தார். சந்தீப் சர்மா "வேகத்தில்" திலக் (65) ஆட்ட மிழந்தார்.

20 ஓவர்களில் மும்பை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களை எடுத்தது.

சாவ்லா (1), பும்ரா (2) ஆட்ட மிழக்காமல் இருந்தனர். ராஜஸ் தான் சார்பில் சந்தீப் சர்மா 5 விக்கெட்டுக் களைச் சாய்த்தார்.

**200 விக்கெட்**

மும்பை வீரர் நபியை அவுட்டாக்கிய ராஜஸ்தானின் சகால், ஐ.பி.எல்., அரங்கில் 200 விக்கெட்டுக்கள் (153 போட்டிகள்) சாய்த்த முதல் பந்தவீச்சாளரானார். அடுத்த இடத் தில் டுவைன் பிராவோ (183 விக் கெட்டுக்கள், 161 போட்டிகள்) உள்ளார்.

**ஜெய்ஸ்வால் சதம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு யாஷஸ்வி ஜெய்ஸ்வால், பட்லர் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது.

ராஜஸ்தான் அணி 61/0 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழையால் போட்டி சிறிது நேரம் தடைபட்டது.

முதலாவது விக்கெட்டுக்காக 74 ஓட்டங்களைச் சேர்த்த போது பியுஸ் சாவ்லா "சுழலில்" பட்லர் (35) சிக்கி னார். அடுத்து வந்த அணித் தலைவர் சஞ்சு சாம்சன், ஹர்திக் பாண்ட்யா, சாவ்லா பந்தில் தலா ஒரு சிக்சர் விளாசினார். சிக்சர், பவுண்டரிகளாக விளாசிய ஜெய்ஸ்வால் 59 பந்துகளில் சதத்தை எட்டினார். திலக் வர்மா பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஜெய்ஸ் வால் வெற்றியை உறுதி செய்தார்.

ராஜஸ்தான் அணி 18.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் 183 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ஜெய்ஸ்வால் (104 ஓட்., 7 சிக்சர், 9 பவுண்டரி), சாம்சன் (38) ஆட்ட மிழக் காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகன் விருதை ராஜஸ்தானின் சந்தீப் சர்மா கைப்பற்றினார். (ம-7,10)

# முன்னதாக வருவாரா? தோனி

## சென்னை ரசிகர்கள் ஏக்கம்



"முழங்கால் காயத்தில் இருந்து தோனி தேறி வருகிறார். இதனால்தான் கடைசி கட்டத்தில் களமிறங்குகிறார்," என சென்னை பயிற்சி யாளர் ஸ்ரீபன் பிளமிங் தெரிவித்தார்.

ஐ.பி.எல்., தொடரில் இம்முறை "தல" தோனியின் துடுப்பாட்டம் வேற "லெவ லில்" உள்ளது. பொதுவாக 8வது இடத் தில் வரும் இவர், டில்லிக்கு எதிராக 16 பந்துகளில் 37 ஓட்., (4 பவுண்டரி, 3 சிக்சர் உட்பட), மும்பை உடனான போட்டியில் ஹர்திக் பாண்ட்யா ஓவரில் "ஹட்ரிக்" சிக்சர் உட்பட 4 பந்துகளில் 20 ஓட்டங்கள், லக்னோவுக்கு எதிராக 9 பந்து களில் 28 ஓட்டங்கள் (3 பவுண் டரி, 2 சிக்சர் உட்பட) விளா சினார். 5 இன்னிங்சில் ஆட்டமிழக்காமல் 87 ஓட்டங்கள் (ஸ்டிரைக் ரேட் 255.88) எடுத்துள்ளார். லக்னோ பந்துவீச்சை தோனி சிதறடித்த போதும், சென்னை அணியால் வெற்றி பெற முடிய வில்லை. இவர் முன்னதாக களமிறங்கி யிருந்தால், சென்னை வலுவான ஓட்ட எண்ணிக்கையை எட்டியிருக்கலாம் என ரசிகர்கள் கருதுகின்றனர்.

**தேவை மூன்று ஓவர்**

இது குறித்து பிளமிங் கூறுகையில்,

"இடது முழங்கால் சத்திரசிகிச்சைக்கு பிறகு தோனி தேறி வருகிறார். இதனால் தான் சில பந்துகளை சந்திக்கும் வகையில் கடைசி கட்டத்தில் களமிறங்குகிறார். இவர் நீண்ட நேரம் துடுப்பாட்டம் செய்ய வேண்டு மென விரும்புகின்றனர். எங்களை பொறுத்த வரை அவர் தொடர் முழுவதும் தேவைப் படுகிறார். சிறந்த "பினிஷரான" இவர், 2-3 ஓவர் விளையாடினால் போதும். மற்றைய துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பாக ஆட வேண்டும்," என்றார். (ம-7,10)

**சத்தமா...இன்னும் சத்தமா**

லக்னோ, வாஜ்பாய் மைதானத்தில் தோனி களமிறங்கியபோது ரசிகர்கள் எழுப்பிய சத்தத்தை, தனது "ஸ்மார்ட் வோட்ச்சில்" பதிவு செய்திருக்கிறார் லக்னோ வீரர் குயின்ரனின் மனைவி சாஷா. இவர் வெளியிட்ட செய்தியில்,

"ரசிகர்களின் சத்தம் 95 டெசிபள் ஒலி அளவை தொட்டது. 10 நிமிடங்கள் இதே அளவு சத்தத்தை கேட்டால், தற்காலிகமாக காது கேளாமை ஏற்படும்," என எச்சரித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவலிங்க பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை தம்பாட்டி நுனிபுரத்தில் நேற்று முன்தினம் பிரதோஷதினத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது.

உருத்திர சேனையால் வழங்கிவைக்கப்பட்ட சிவலிங்க திருமேனி நுனிபுரம் மக்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

## சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.45மணிக்கு மூல மூர்த்தி பூசை, வசந்தமண்டபபூசை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் காட்சி இடம்பெறும் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (நி-6)

## செயற்பட்டு மகிழ்வோம்

(கரணவாய்)

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விழா எதிர்வரும் 28 ஆம் திகதி பி.ப 2 மணியளவில் பாலர் பாடசாலை முன்றலில் நிலையத் தலைவர் கி.கிருஷ்ணாகரன் (ஓய்வு நிலை அதிபர்) தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் மருத்துவர் க.உமாசுதன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (நி-6-60)

## நாடக ஆற்றுகையும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)


கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் தயாரிப்பில் பேராசிரியர் சி.ஜெய்சங்கர் நெறியாள்கையில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நடைமுறைக் கல்வி பற்றிய கேள்வி மற்றும் பொருத்தமான கல்வி முறையின் தேவை பற்றியும் உரையாடலைத் தூண்டும் நாடகமான "சத்திய சோதனை" நாடக ஆற்றுகையும் கலந்துரையாடலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.என தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன எதிர்வரும் 2024.05.11 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# இலங்கை அகதிகள் மூவர் மணல் தீடையில் தஞ்சம்



(மன்னார்)

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இங்குள்ள தமிழர்கள் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் அடைந்து வருகின்ற நிலையில் இலங்கை மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவர் உட்பட 3 நபர்கள் தனுஷ்கோடி அடுத்த ஐந்தாம் மணல் தீடையில் நேற்று காலை தஞ்சம் அடைந்துள்ளதாக அப்பகுதிக்கு மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

தஞ்சம் அடைந்த இலங்கை அகதிகளை மரைன் பொலிஸார் அதிரடியாக நடவடிக்கை எடுத்து கடலுக்குள் சென்று பாதுகாப்பாக மீட்டு கரை கொண்டு வந்தனர்.

அதனையடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-285)

# இனவழிப்பும் தமிழ் மக்களின் இன சுத்திகரிப்பு நூல் வெளியீடும்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் கட்டமைத்த இனவழிப்பும் தமிழ் மக்களின் இன சுத்திகரிப்பும் எனும் நூல் வெளியீடு தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியினரால் கடந்த சனிக்கிழமை நல்லூரில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனின் காரியாலயத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள்.அரசியல் பிரமுகர்கள் ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மின் ஒளிக்காக பொருத்தப்பட்ட மின்வடங்கள் அபேஸ்

## பொலிஸில் முறைப்பாடு

(கரணவாய்)

வடமராட்சி கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் பொருத்தப்பட்டிருந்த சுமார் ரூபா 6 இலட்சம் பெறுமதியான மின் வடங்கள் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பில் நேற்று வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று நேற்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டு கழகம்யாழ் மாவட்ட ரீதியில் றேஞ்சஸ் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டிகளை மின்னொளியில் நடத்திவருகிறது. அது தற்போது அரையிறுதி போட்டி வரை வந்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் வாரமளவில் இறுதிப் போட்டி நடைபெறவுள்ள நிலையிலேயே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மைதானத்தில் மின்னொளிக்காக பொருத்தப்பட்டிருந்த சுமார் ரூ.6 லட்சம் பெறுமதியான மின் வடங்கள் களவாடப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய் யப்பட்டுள்ளது. (நி-6-60)



கரவெட்டிகரைவை வெல்லன் விநாயகர் ஆலய தேர்த் திருவிழா நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

(படம்- மகாலிங்கம்)

# மே 18 நினைவேந்தல் தொடர்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் 15 ஆவது ஆண்டாக அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் அதனை பல்வேறு புதிய வழிமுறைகளூடாக மக்கள் மயப்படுத்த வேண்டும் என சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

யாழில் நேற்று முன்தினம் மாலை சிவில் சமூக அமைப்புக்களின் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தலை பல புதிய வழி முறைகளூடாக மக்கள் மயப்படுத்தல் தொடர்பிலான முன்மொழிவுகள் கலந்துரையாடப்பட்டன.


யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் நினைவேந்தல் செயற்றிட்டங்கள் தொடர்பிலும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

இக் கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 80 | 100-140 | 120 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 140 | 155 | 180 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 100 | 100-120 | 120 |
| தக்காளி | 100 | 80 | 70 | 80-100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100-120 | 160 |
| கோவா | 160 | 180 | 150 | 180 | 250 |
| கரட் | 350 | 350 | 280 | 300 | 400 |
| பூசணி | 120 | 140 | 80 | 80-100 | 140 |
| புடோல் | 100 | 200 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 120 | 100 | 50 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 350 | 320 | 250 | 250 | 400 |
| பாகற்காய் | 500 | 300 | 300 | 850 | 450 |
| வெண்டக்காய் | 100 | 130 | 60 | 100-120 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | — | 200 |
| பயற்றங்காய் | 350 | 250 | 250 | 250-350 | 250 |
| லீக்ஸ் | 300 | 300 | 220 | 200 | 280 |
| பீற்றூட் | 200 | 150 | 180 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 300 | 200 | 200 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 400 | 400-700 | 800 |
| போஞ்சி | 150 | 250 | 300 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 50 | — | 100 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 100 | 60-90 | 100 |
| தேசிக்காய் | 800 | 400 | 500 | 500-800 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 110 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 300 | — | 400 |
| வெங்காயப்பூ | — | 250 | 200 | — | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 90 | 80 | 50 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | — | — | 120 | 100 | — |

யாழ். நீரிழிவுக்கழகமும் யாழ். பல்கலைக்கழக கல்லூரியும் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாமும் சுகாதார விழிப்பூட்டல் செயலமர்வும் கடந்த சனிக்கிழமை குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலயத்தில் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி வருட புத்தாண்டுப் பலன்கள்

### ஜாதகர்

விருச்சிக ராசியின் அதிபதி செவ்வாய். இந்த வருடம் உங்களில் எப்போதும் உள்ள சுறுசுறுப்பு குறையும். உடல் சற்று சுணக்கம் காணும். ஆனால் உண்மையான காரணம் உடலில் சற்று பழுது தென்படுவதாகும். இந்த வருடம் ஆரம்பித்தவுடன் முழு உடல் பரிசோதனை செய்துகொள்ளுங்கள். இது ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும்.

### தனம்

இந்த வருடம் பண வரவு இருக்கும் ஆனால் இல்லை கதைதான். மழை வரவும் செலவும் அதிகமாக இருப்பதால் பணம் வந்த சுவடு தெரியாமல் மறையும். மேலும் உங்கள் தொழில் சார்ந்து கடன் வாங்கவேண்டி இருப்பதால் அது ஒரு காரணமாக பண வரவு கணக்கை இடிக்கும்.

### வீடு

உங்களில் சிலர் சொந்த வீட்டை விட்டு, வாடகை வீட்டிற்கு செல்வீர்கள். சிலர் பூர்வீகம் நோக்கி நகர்வீர்கள். சிலர் சொந்த வீட்டை வாடகைக்கு விடுவீர்கள். வீட்டின் மீது கடன் வாங்கவும்கூடும். வேளாண் சம்பந்த வாகனம் வாங்க இயலும்.

### சந்ததி

உங்களில் சிலர் முன்பு பார்த்துக்கொண்டிருந்த வேலையின் அடிப்படையில் அரசு உதவியுடன் சொந்தத் தொழில் தொடங்கி விடுவீர்கள்.

### நோய்

சிலர் தலைவலியால் ரொம்ப சிரமப்படுவர். சிலருக்கு தொடையில் தசைப் பிடிப்பு ஏற்பட்டு மிக துன்பப்படுவர்.

**வேலை:** அரசு வேலை கிடைக்கும்வாய்ப்பு உண்டு, கட்டடத்துறை, ரியல் எஸ்டேட் வகை வேலை கிடைக்கும். வங்கி வேலையில் சேரலாம். எந்த வேலையும், மிக நல்ல உயரிய வேலையாக



விருச்சிகம்

அமையும்.

**வழக்கு:** வழக்கு சற்று இழுத்தடிக்கும். வழக்கின் போது, அரசு வக்கீல், உங்கள் மீது வேண்டாத பழிகளை அடுக்கி, உங்கள் வழக்கை முடிக்கவிடாமல் செய்து விடுவார்.

**எதிரி:** உங்கள் எதிரி வெளியில் இருந்து வர வேண்டாம். உங்கள் வாக்கும் உங்களின் வீட்டில் உள்ளவர்களுமே உங்களின் எதிரியாகிவிடும்.

### எதிர்பாராத இடையூறு

இந்த வருட இடையூறு, துன்பமெல்லாம் உங்கள் ஆரோக்கியம் சம்பந்தமானதாக இருக்கும். வயிற்று வலி, அஜீரணக் கோளாறு மற்றும் பாதத்தில் நரம்புகள் இழுத்தல் என இவற்றால் சிரமம் ஏற்படும். உங்களில் ஒரு சிலர் மருமகளால் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாக நேரிடும். ஒரு சிலரின் தாய்- தந்தை சற்று உடல் நலக்குறைவை சந்திப்பர்.

### அதிஷ்டம்

உங்களில் சிலருக்கு யோக வரவுகள் என்பது வெளிப்படையாக தெரியாமல், ரகசியமாக கிடைக்கும். அதனை நீங்கள் முழுமையாக அனுபவிக்க இயலாது. வேறு சிலருக்கு அதிஷ்ட நிகழ்வுகள் என்ற விடயம் அடைபட்டு மறைந்துவிடும். எல்லாம் போன ஜென்மத்து பாவம் என நொந்து கொள்வீர்கள். இது 9 ஆம் அதிபதி 8 இல் மறைவதால் வரும் வினையாகும்.

### தொழில்

இந்த வருடம் நீங்கள் நடத்திவரும் தொழிலில் முழு கவனம் செலுத்த இயலாமல் போய்விடும். அது



உடல்நலம் சார்ந்து இருக்கும்.

எனவே உங்கள் வாரிசு அதில் ஈடுபட்டு உழைப்பார். வேறு சிலர் தாங்கள் இதுவரையில் பார்த்து வந்த வேலையை தனது சொந்தத் தொழிலாக மாற்றிக்கொள்வர்.

இதில் அரசு மானியமும் சிலருக்கு கிடைக்கும். சிலர் உங்கள் வீட்டின் ஒரு பகுதியில் கைத்தொழில் முறையில் சிறு வணிகம் தொடங்குவீர்கள்.

### லாபம்

உங்கள் லாபாதிபதி நீச பங்கம் ஆகியுள்ளார். எனவே உங்களின் எதிர்பாராத வருமானம் சர்ச்சை இழுத்தடித்துவிட்டு பின் தான் கிடைக்கும்.

### விரயம்

இந்த வருடம் செலவு கட்டுக்கடங்காமல் இருக்கும் செலவும் ஆடம்பரமாக அமையும். செலவுகள் அநேகமாக உங்கள் வாரிசு சம்பந்தமான சுபச் செலவுகளாக இருக்கும் அல்லது உங்களது திருமண செலவாக இருக்கும்.

சிலரின் மருமகன் பெரிய தொகை அல்லது சொத்து கேட்டு அடம்பிடிப்பார். வெகு சிலர், ஆரோக்கியம் சார்ந்து வெளிநாடு, வெளியூர் சென்று சிகிச்சை எடுத்துக் கொள்ளும் செலவாக இருக்கும்.

இந்த வருடம் விருச்சிக ராசிக்காரர்களுக்கு சுப செலவுகள் நிறைந்த வருடமாக அமையும். பணம் கரைந்தாலும், மனம் நிறையும். ஆரோக்கியம் மட்டும் சற்று நொண்டுகிறது. பரவாயில்லை 50% மார்க் வரும்.

### பரிகாரம்

உங்கள் விருச்சிக செவ்வாய், சனியுடன் கூடி நிற்கிறார். உங்களுக்கு இஷ்டமான முருகனை வணங்கவும்.

சனி + செவ்வாய் சேர்க்கைக்கு செவ்வாய்க் கிழமையில் கொள்ளு சுண்டல், செம்பருத்தி பூ இவற்றுடன் அகல் விளக்கில் சிவப்பு துணியில் 25 மிளகாய் பொட்டலம் கட்டி, நெய் அல்லது இலுப்பை எண்ணெய் ஊற்றி சிவப்பு திரியில் தீபம் ஏற்றவும்.

பாடசாலை பிள்ளைகளுக்கும் பாடசாலை கட்டட செலவுக்கும் உதவலாம்.

(தொடரும்)

## இராசிபலன்

23.04.2024
சித்திரை 10, செவ்வாய்க்கிழமை,
பூரணை பின்னிரவு 5.39 மணிவரை

சித்திரை முன்னிரவு 10.51 மணிவரை
சுபநேரம்-10.30-12.00 மணிவரை
இராகுகாலம் -3.00-4.30 மணிவரை

சித்திரா பௌர்ணமி விரதம்.
சந்திராஷ்டமம்.
அவிட்டம், சதயம்.

**வளவன்**



மேஷம்

நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.



கடகம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, தேவைகள் பூர்த்தியாகும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.



துலாம்

திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



மகரம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.



ரிஷபம்

குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.



சிம்மம்

சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், உறவு பகை பாராமல் உதவும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.



விருச்சிகம்

சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சயனசுகக் குறைவான நாள்.



கும்பம்

நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், உடல் நலன் சீராகும் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.



மிதுனம்

பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள், நன்மைகள் நாடிவரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும்.



கன்னி

வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.



தனுசு

தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், வருமானம் திருப்தி தரும்.



மீனம்

கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

**வாக்குறுதியைப் போற்றுபவர் ஒவ்வொருவரும் கோடீஸ்வரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



**பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை**
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்
யாழ்.பல்கலைக்கழகம்

வளாக அமைப்புக்கு எதிரானவர்கள் அரசாங்கம் முழுமையான ஒரு பல்கலைக்கழகத்தை அமைக்காது இப்பிரதேசத்தில் இருக்கும் இரு சிறந்த பாடசாலைகளை எடுத்து வளாகம் அமைப்பதால் பாடசாலைக்கல்வி பெரிதும் பாதிக்கப்படும் எனக் கருத்துத் தெரிவித்தனர். மேலும் அமையும் வளாகம் தமிழ் மக்களை ஏமாற்றும் கண்துடைப்பாகுமென வாதிட்டனர்.

1965-1970 காலத்தில் கௌரவ பிரதமர் டட்லி சேனநாயக்கா அரசாங்கத்தில் கல்வி அமைச்சராக இருந்த I.M.R.A இரிய கொல்ல உயர்கல்வி பெறும் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க ஆறு கனிஷ்ட பல்கலைக்கழகக் கல்லூரிகளை அமைத்தார். இதில் ஒரு கனிஷ்ட பல்கலைக்கழகக் கல்லூரி பலாலியில் அமைக்கப்பட்டது. 1970 இல் ஆட்சிக்கு வந்த இடதுசாரி அரசாங்கம் கனிஷ்ட பல்கலைக்கழக கல்லூரிகளை மூடி அங்கு பயின்ற மாணவர்களை தொழில்நுட்ப கல்லூரிக்கும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளுக்கும் அனுப்பினர். பல்கலைக்கழக அனுமதி மேலும் இறுக்கமடைந்திருந்ததுடன், பலாலியில் செயற்பட்ட பல்கலைக்கழக கல்லூரி மூடப்பட்டது. யாழ்ப்பாண மக்களுக்கு கவலை தரும் விடயமாக இருந்தது.

யாழ்ப்பாண வளாகத்தை திறந்து வைக்க அன்றைய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க யாழ்ப்பாணம் வந்தபொழுது இதனை எதிர்த்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னனியால் திரு.அ.அமிர்தலிங்கம், திரு.மு.சிவசிதம்பரம் தலைமையில் நல்லூர் வீரகாளி அம்மன் ஆலய வளவில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

1974ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலின்படி இலங்கைப் பல்கலைக்கழகத்தின்கீழ் யாழ்ப்பாண வளாகம் திருநெல்வேலியில் அமைக்கப்பட்டது. இவ்வளாகத்தில் மானிடவியல் பீடம், விஞ்ஞானம் பீடம், சட்டபீடம், விளையாட்டுக் கற்றை நெறித்துறை அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலும் ஓகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து கலாநிதி கனகசபாபதி கைலாசபதி வளாகத் தலைவராக மூன்று வருடங்களுக்கு நியமிக்கப்பட்டார். வளாகத் தலைவர் பதவிக்குப் பல பேராசிரியர்கள் முயற்சித்த பொழுதும் அரசாங்கம் கலாநிதி க. கைலாசபதியையே நியமித்தது. இவர் நாடறிந்த தமிழ் விரிவுரையாளராக இருந்ததாலும் அன்றைய அரசாங்கத்தின் இடதுசாரிக் கொள்கைகளுக்கு ஒத்துப்போகக் கூடியவர் என்பதாலும் இவர் நியமனம் இடம் பெற்றது எனக்கூறப்பட்டது.

வளாகத் தலைவராக நியமனம் பெற்ற கலாநிதி.க.கைலாசபதியின் கடின உழைப்பாலும், வசீகரத் தலைமைத்துவத்தாலும் இரண்டு மாதங்களுள் வளாகத்தின் அடிப்படை நிர்வாகமும், உட்கட்டுமானமும் செய்துமுடிக்கப்பட்டன. இவரது முயற்சியால் கலாநிதி.கா.இந்திரபாலா மானிடவியல் பீடத்தின் பீடாதிபதியாகவும், பேராசிரியர்.P. கனகசபாபதி விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாகவும் பொறுப்பேற்றனர். சேர் பொன்னம்பலம் இராமநாதனின் நெருங்கிய உறவினரான கொழும்பு வளாகச் சட்டப் பேராசிரியர் T.நடராசா யாழ்ப்பாண வளாகச் சட்டப் பீடாதிபதியாகப் பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்பட்டபொழுதும் இதனை அவர் பொறுப்பேற்கவில்லை. இதனால் சட்டபீடம் ஆரம்பிக்க முடியாது போயிற்று. இதுபோல விளையாட்டுக் கற்கைநெறி பல காரணங்களால் ஆரம்பிக்கப்படவில்லை.

மேலும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புப் பிரிவை அரசாங்கம் பொறுப்பேற்றதால் அங்கு கல்விகற்ற மாணவர்கள் கடமை புரிந்த விரிவுரையாளர்கள், பணியாளர்கள் யாழ்ப்பாண வளாகத்துக்குள்




உள்வாங்கப்பட்டனர். இவர்களே வளாகத்தின் முன்னோடிகளாக விளங்கினர்.

இச்சூழ்நிலையில் 1974ஆம் ஆண்டு ஒக்டோபர் 6ஆம் திகதி அன்றைய பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவினால் யாழ்ப்பாண வளாகம் சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்பட்டது. பெரும் எண்ணிக்கையான கல்வியாளர்கள், பொதுமக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாண வளாகத்தை அரசாங்கம் இரு அடிப்படை நிலைப்பாட்டில் அமைத்தது. இவ்வளாகம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயற்படும் எனவும் இங்கு நாட்டின் எல்லாப் பிரதேச மாணவர்களும் கல்வி கற்க முடியும் என்பதுடன் இங்கு தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகள் மூலம் கல்விச் செயற்பாடுகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பின்புலத்தில் 1974, 1975, 1976ஆம் ஆண்டுகளுக்கு உரிய தகுதியான க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் மானிடவியல், விஞ்ஞான பீடங்களுக்கு அனுமதிக்கப்பட்டனர். மானிடவியல் பீடத்தில் தமிழ், சிங்கள மொழிகள் மூலமும் விஞ்ஞான பீடத்தில் ஆங்கில மொழி மூலமும் கற்கைகள் இடம்பெற்றன.

1977இல் ஐக்கியதேசியக் கட்சி தேர்தலில் மாபெரும் வெற்றிபெற்று ஆட்சியமைத்தது. தேர்தலின் பின் நாடு தழுவிய நிலையில் இடம்பெற்ற இனக்கலவரத்தால் யாழ்ப்பாண வளாகத்தில் கல்விபயின்ற சிங்கள மாணவர்கள், இங்கு கல்வியைத் தொடர விரும்பாததால் தென்னிலங்கை வளாகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். இவர்கள் களனி வளாகத்தில் யாழ்ப்பாண வளாகச் செயற்பாடுகளை முன்னெடுத்து யாழ்ப்பாண வளாகப் பட்டத்தையே பெற்றனர்.

1977 ஓகஸ்டில் பேராசிரியர் கைலாசபதி தனது பதவிக் காலத்தைப் பூர்த்திசெய்து (sabbatical) விடுமுறையில் செல்ல பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் S.வித்தியானந்தன் வளாகத் தலைவராக நியமிக்கப்பட்டார். இவரின் நியமனத்தைத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் வரவேற்றது. ஐக்கிய தேசியக் கட்சி 1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் உயர் கல்வி மறுசீரமைப்புப் பற்றி பல விடயங்களைக் குறிப்பிட்டிருந்தது. நாட்டிற்கு ஒரு பல்கலைக்கழகம் தான் இருக்க வேண்டுமென்ற நிலையை மாற்றி ஏற்கனவே வளாகங்களாக இருப்பவை பல்கலைக்கழகங்களாகத் தரம் உயர்த்தப்படும் என்றும் பல்கலைக் கழகமானிய ஆணைக்குழு நிறுவப்படும் என்றும் கூறப்பட்டது. இப்பின்புலத்தில் 1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகச் சட்டம் இன்றுவரை சில திருத்தங்களுடன் அமுலில் உள்ளது. இந்நிலையில் 01.01.1979 இல் யாழ்ப்பாண வளாகம் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தப்பட்டது. வளாகத் தலைவராக இருந்த பேராசிரியர் சு.வித்தியானந்தன் முதல் துணைவேந்தராக நியமனம் பெற்றார்.

அன்று பல்கலைக்கழகம் நான்கு நிர்வாகப் படிமுறைகளைக் கொண்டிருந்தது. அவையாவன: கோட் (Court), பேரவை (Council), மூதவை (Senate), பீடச்சபை (FacultyBoard). இதனால் பல்கலைக்கழகத்தில் பணிபுரிபவர்கள் மாத்திரமன்றி, சமூக முக்கியத்துவம் பெற்ற வெளியாட்களும் பல்கலைக்கழகச் சபைகளில் உறுப்பினராகி சேவையாற்றும் நிலை இருந்தது.

## வேந்தர்கள்

01.01.1979 இல் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டபோது முன்னாள் நீதிபதியாக இருந்த திரு.வி.மாணிக்கவாசகர் முதல் வேந்தராக நியமிக்கப்பட்டார். 1978 சட்டத்தின்படி வேந்தருக்கு சில அதிகாரங்கள் உள. வருடாந்த அறிக்கைகள், அபிவிருத்திச் செயற்பாடுகளின் பரிசீலனை மற்றும் துணைவேந்தர் தெரிவு போன்றன முக்கிய அதிகாரங்களாகும். 1982இல் துணைவேந்தர் தெரிவு பல்கலைக்கழக கோட்டால் மேற்கொள்ளப்பட்டது. 1985இல் "கோட்" முறை நீக்கப்பட்டுவிட்டது. இன்று வேந்தர்களின் பங்களிப்பு பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமைதாங்கும் சம்பிரதாயத்துடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வேந்தர் மாணிக்கவாசகரின் பின் பேராசிரியர் த.நடராசாவும் பின்னர் பேராசிரியர் எம்.சிவசூரியாவும் வேந்தர்களாக நியமிக்கப்பட்டார்கள். பின் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் இன்றுவரை வேந்தர் பதவியை வகித்து வருகிறார்.

பல்கலைக்கழகத்தில் 1980 செப்டெம்பர் 13ஆம் திகதி முதல் பட்டமளிப்பு விழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தது. முதலாவது பட்டமளிப்பு விழாவில் பல்கலைக்கழகம் 8 பேருக்கு கௌரவப் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தது. பண்டிதர் என்.நவசிவாயகம், திரு.என்.ஞானப்பிரகாசம், திரு.பி.செல்வநாயகம், திரு.ஜேம்ஸ் இரத்தினம், Dr.வி.சி.குழந்தைசாமி, Dr.ஏ.சின்னத்தம்பி, பேராசிரியர் மில்றோய் போல், பேராசிரியர் ஏ.டபிள்யூ. மயில்வாகனம் ஆகியோரே அவர்களாவர்.

இதனைத் தொடர்ந்து சமூகத்தில் பல்வேறு துறைகளில் அதிசிறப்பாகப் பணியாற்றியவர்களை இனங்கண்டு கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. கௌரவிக்கப்பட்டவர்களுள் சேவியர் ஸ்ரனிசிலொஸ் தனிநாயக அடிகளார் (ஏகாந்த நிலை), டாக்டர்.இராமச்சந்திரன் பரராஜசிங்கம், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆயர் தியோகுப்பிள்ளை, மில்க்வைற் கனகராஜா (ஏகாந்தநிலை), செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன், அளவெட்டி விநாசித்தம்பி, டாக்டர்.எம்.கணேசரட்ணம் எனப்பலர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சீரணி நாகபூஷணி …

# சீரணி, சண்டிலிப்…

# ஆலய இரதோற்ச…

## 23.04.2024 இன்று செவ்…



### தேவஸ்தான பிரதம குருக்களின் ஆசிச்செய்தி

ஆத்தாலே எங்கள் அபிராமி வள்ளியை
அண்டம் எல்லாம் பூத்தாலை மாதுளம்பூ நிறத்தாலே
புவியடங்கக்காத்தாலே அங்குச பாசாங்குசமும் கரும்பும் வில்லும்
சேர்த்தாலே முக்கனியை தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே

காசியில் காமாட்சியாகவும் காஞ்சியில் விசாலாட்சியாகவும் மதுரையில் மீனாட்சியாகவும் நின்று தன் அருள் ஆட்சியை புரிகின்ற சக்தி ஆனவள் இலங்கையில் எழில் கொஞ்சும் சண்டிலிப்பாய் மண்ணின் தாயாய் விளங்கும் சீரணி நாகபூஷணி தாயவள் அனைத்து சக்தி சொருபங்களையும் தன்னுள் உள்ளடக்கி நாகபூஷணித்தாயாய் சீரணிப்பதியில் வீற்றிருந்து எல்லா மக்களையும் அரவணைத்து வேண்டுவோருக்கு வேண்டும் வரங்களை வாரி வழங்கி ஆதரிப்பவள் நம் அன்னை நாகபூசணி. அருள் சக்தி ஒப்பிட முடியாதவேத வள்ளியும் அவளே. ஆங்கே நிகர்இல்லாத அபிராமி வள்ளியும் அவளே அத்தகைய மகாசக்தியானவள் இவ் சண்டிலிப்பாய் மண்ணிலே இவ் ஆலயத்தில் எழுந்தருளி பல்வேறு சக்தி சொருபங்களாக பிரமிக்கின்றாள் என்பதையும் நாம் அறிவோம். அன்னை அருளாட்சியுடன் நடைபெறும் சித்திராப் பௌர்ணமி தேர்த்திருவிழா சிறப்புற பூலோக நாயகி திரிபுர சுந்தரி அன்னை நாகபூஷணித் தாயின் திருமேனியில் மலர்ப்பாதம் பணிந்து ஆசிகூறுகின்றேன்.

**லோகசமஸ்தா சுகினோபவந்து கிரியா அரங்கார வருதி**
**சிவஸ்ரீ.கு.சோமஸ்கந்தகுருக்கள்,**
**மகோற்சவகுரு. (தேவஸ்தான பிரதம குரு)**



### வாழ்த்துச் செய்தி

சண்டிலிப்பாய் - சீரணி திருவருள்மிகு சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு வெளியிடுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். யாழ்ப்பாணத்தின் கிராமிய அடையாளங்களை இன்றும் வைத்திருக்கின்ற பிரதேசங்களுள் சண்டிலிப்பாய் பிரதேசமும் ஒன்று. இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் மற்றும் ஆன்மீகச் செயற்பாடுகளின் அடையாளமாக விளங்குவதுதான் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயம் ஆகும். இப்பிரதேசத்தில் நான் பணியாற்றிய காலத்தில் பிரதேச மக்கள் அம்பாள் மீது வைத்திருக்கின்ற பக்தியைக் கண்டிருக்கின்றேன். அத்துடன் அம்பாளின் அருளினை நானும் பெற்றிருக்கின்றேன். சமயாசார நடைமுறைகளை சரிவர பின்பற்றி இந்த ஆலயத்தினை நெறிப்படுத்தி வருகின்ற ஆலய நிர்வாகத்தினருக்கும் இந்த பணியினை மேற்கொண்ட அனைத்து அம்பாள் அடியார்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு நானும் அம்பாள் அடியவராக அந்த அம்பாளின் பாதக்கமலங்களை தொழுது வணங்குகின்றேன். அம்பாளின் மகோற்சவம் சிறக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி உ.யசோதா,**
**பிரதேச செயலர், பிரதேச செயலகம் நல்லூர்.**

**“சீரணித்தலம் வாழும் செல்வியே நாகம்மா -உன்**
**பாதமலர் தொழுதோம் பரிவுடன் கடைக்கண் பாரம்மா”**

மருத நிலப்பரப்பிலே மருதமரத்தை தலவி ருட்சமாகக் கொண்ட சீரணி ஸ்ரீ நாகபூஷணித் தாயின் பேரருளே அருளாம். ஈழத்திரு நாட்டின் மிகப் பிரபலமான ஆலயம் என்றால் அது மிகையன்று. தாயவளை தேடி வந்து வேண்டும் வரங்களைப் பெறும் பக்த கோடிகள் ஏராளம். தாயவளின் மகோற்சவமானது சித்திரைப் பௌர்ணமியை இரதோற்சவமாகக் கொண்ட சிறப்பான நாளாகும். வேண்டுவோர் வேண்டும் வரங்களை தந்து அருள்பாலிக்கும் எங்கள் தாயவளின் கடைக்கண் பார்வை அனைத்து பக்த கோடிகளுக்கும் கிடைக்கவென இவ் இரதோற்சவ நாள் சிறப்பாக அமைவுற அன்னையவள் திருவருள் கைகூடட்டும்.

**தர்மகர்த்தா சபை.**



### வாழ்த்துச் செய்தி

எமது பிரிவிலே அமைந்துள்ள வரலாற்றுப் பெருமை மிக்கதும் அற்புதங்கள் நிறைந்தத்துமான சண்டிலிப்பாய் சீரணி பதியுறை நாகபூசணித்தாயின் தேர்த்திருவிழா சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு மகிழ்வடைகின்றேன்.

தஞ்சமென கெஞ்சுவோர்க்கு அவயமளித்து. வேண்டுவோர்க்கு வேண்டுவன செய்து அருளாட்சி புரிகின்ற நாகபூசணித்தாயின் மகோற்சவம் சிறப்புற நடைபெற்று சித்திரைப் பூரணை நன்னாளாகிய இன்று தேரேறி அருள் பொழியும் நிலைகண்டு பேறுபெறுவதும் எனும் தத்துவத்திற்கு அமைய தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் நேர்த்திக்கடன்களை இவ்வாலயத்தில் நிறைவேற்றி வருவது சிறப்பான விடயமாகும். சீரணித்தாயின் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறுவதற்கும் அனைவருக்கும் அன்னையின் அருட்கடாட்சம் கிடைக்கவும் பிரார்த்திக்கின்றேன். ஆலயத்தை செம்மையுற வழிநடாத்தும் அறங்காவலர் சபையினருக்கும், தொண்டர்களுக்கும், பக்தர்களுக்கும் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன் எல்லாம் வல்ல நாகபூசணித்தாயின் அருள் அனைவருக்கும் கிடைக்கப்பெற பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி சுபாஜினி மதியழகன்,**
**பிரதேச செயலாளர், சண்டிலிப்பாய்.**





**புதிய… சீர…**

சீரணி அ… மானது துன்பங்களையும் து… பௌர்ணமியுடன் கூடிய வ… வகையில் அமைதல் மிக்… தேர்த்திருவிழாவானது அ… மகிழ்ச்சியையும் இன்பத்தை… அமைய அன்னை அருள்பா… கிறேன். மேலும் ஆலய திரு… யடைந்து அடுத்து வரும் ம… சீரணி நாகபூஷணி அம்பாள்… வோமாக.

## இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்:


**சீரணி மஹால்**
**திருமண மண்டபம்**
தொ.பே: 021 225 5785 சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய்.

**மணி அன் ஈசன் ஜுவெல்லறி**
**Mani & Easan Jewellery**
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
தொ.பே: 021 791 2677, 076 256 5272
இல.02, நவீன சந்தை, பிரதான வீதி, சங்கானை.

**கந்தசாமி அன் சன்ஸ்**
**KANTHASAMI & SONS**
பலசரக்குப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
Main Street, Chankanai.
பிரதான வீதி, சங்கானை.

**மீனாட்சி அரைக்கும் ஆலை**
சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். தொ.பே: 076 414 6422

**K Food Land**
Seerani Junction, Sandilipa…
TP: 021 225 5140
**Jaffna Casa…**
Hotel & Restaurant
Ac, Non Ac Rooms.

**மொடேன் மற்ஸ் அக்கடமி**
-சண்டிலிப்பாய்-
புதிய கல்வியாண்டு - 2024
தரம் 03-O/L, A/L வரை
(தமிழ்மொழி மூலம், ஆங்கிலமொழி மூலம்)
எல்லாப் பாடங்களுக்குமான வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றது
தொ.பே: 077 817 5822
நிர்வாகி: B.Kuga (கணித ஆசிரியர்).

**தரன் கல்லூரி**
மருதடிச்சந்தி, மானிப்பாய்.
தரம் 06 முதல் O/L, A/L கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகள் யாழ். முன்னணி ஆசிரியர்களால் நிகழ்த்தப்படுகிறது.

**லக்ஷ்மி புடவையகம்**
**LUXMI TEXTILES**
No.10, Aalady Junction,Manipay.
077 239 1800

**Golden Electrical**
All Kind of Electrical Needs
Keerimalai Road, Sandilipay.
Tel: 077 405 6771

**ஐங்கரன் மோட்டார்ஸ்**
மானிப்பாய்
Authorized Dealers for Hero and Honda Spare Parts. Authorized Distributors of CEAT TYERS in jaffna. Market view, Jaffna Road, Manipay.
iynkaranmotors@gmail.com
Tel: 021 225 5150

**பத்மராஜன் அன் சன்**
நகைத் தொழிலகம்
**Pathmaraja & Son Jewellers**
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.
பிரதானவீதி, சங்கானை.
தொ.பே: 077 600 2584

With Best Compiliment From:
**சக்தி எலக்ரிக்கல்…**
மின்சார, இலத்திரனியல் பொருட்களின் விற்பனை
முதல்வன் சந்தைச் சதுக்கம்…
சங்கானை.
தொ.பே: 077 327 6397


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாள் தேவஸ்தானம்


# ப்பாய்.

# வ சிறப்பிதழ்

## வாய்க்கிழமை

சீரணி நாகபூஷணியம்மைக்குத் திருத்தேர்
செய்யத் திருவுளங் கொண்ட திருவுடையாளன்!
பவத்தொண்டாய அவத் தொண்டகற்றித்
தவத்தொண்டாய சிவத் தொண்டிற் திளைத்த சீரியன்!

மலாக்காத்தம்பையா வள்ளியம்மை
குன்றாவிளக்கு நற்பண்பாளன்!
நற்றவசீலன்! தங்கத்தவத்தினன்!
தருமசீலன்! மாபெரும் வள்ளல்!
காமதேனு! புண்ணியசீலன்!
செல்வச் சீமான்! அறம் வளர்த்த அண்ணல்!!



### தியதோர் பரிமாணத்தில் சீரணி. அன்னையின் வசந்தகால இரதோற்சவம்

ணி அன்னையின் இரதோற்சவ யும் துயரங்களையும் நீக்கி சித்திராப் ய வசந்த காலத்தை வரவேற்கும் மிகச்சிறப்பாகும். அந்த வகையில் து அனைவரதும் வாழ்க்கையில் தையும் வழங்கி எதிர்காலம் சிறப்பாக ருள்பாலிக்க வேண்டுமென வேண்டு ய திருப்பணி வேலைகள் முழுமை ம் மகோற்சவம் சிறப்பாக அமைய ம்பாள் திருவருள் கிடைக்க வேண்டு

**கு.எழிற்செல்வன்,**
**கிராம அலுவலர்,**
**J/143 சண்டிலிப்பாய் மேற்கு.**



### தர்மகர்த்தா சபையின் வாழ்த்துச் செய்தி


**சி.சிவகுருநாதன், தலைவர்,**
**தர்மகர்த்தா சபை.**

வடபுலத்தின் யாழ்.மண்ணில் சண்டிலிப்பாய் பகுதியில் அருளாசி வழங்கிக் கொண்டிருக்கும் சீரணி நாகபூஷணி அம்பாள் சித்திரைப் பௌர்ணமி தினமான இன்று தேரேறி வருகின்றாள். அம்பாளின் அருளைப் பெற்று உலகெங்கும் வாழும் அடியார்களுக்கு அன்னையின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டியும் ஆணவம், கன்மம், மாயை விலகி சகல செல்வங்களும் பெற்று வாழ்வில் ஒளிபெற வேண்டுமென்றும் இந்நன்னாளில் அம்பாளை வணங்கி வாழ்த்தி நிற்கின்றோம்.

"நல்லதையே சிந்திப்போம் நல்லனவே செய்வோம்" ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள்.



**ச.பகீரதன், (செயலாளர்)**
**தர்மகர்த்தா சபை.**



### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

அற்புதம் நிறைந்த அம்பாள் குடிகொண்டிருக்கும் திருக்கோவில் சீரணி.இத்திருக்கோவில் வருடாந்த மகோற்சவ ஆரம்பமாக இன்று திருத்தேர் விழா நடைபெறவுள்ளது. பலவூர் மக்களும் திரண்டு கலந்து சீரணி நாகபூணி அம்மனின் திருத்தேரைத் தரிசித்து மகிழ்வர். இப்புண்ணிய நாள் சிறக்கப் பிரார்த்திப்பதோடு அடியார்கள் சீரோடு வாழ நல்லாசிகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

சீரணி அம்பாளின் திருவிழாக் காலம் என்பது வழிபாட்டுப் பாரம்பரியத்தோடு எம் பாரம்பரிய கலைகளையும் பாதுகாக்கும் காலமாகக் கருதலாம். அம்பாளின் கருணையால் யாவும் சிறக்க வேண்டி அமைகிறேன்.

**கலாநிதி.ஆறு திருமுருகன்,**
**தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை.**

### தேர் உலா காண...

சித்திரை பௌர்ணமி நாளின்
பாயும் நல் தேர்க்குதிரையின்...
பவளக் கால்களும் அழகு தொடுக்கும்
மேல்விதான யாழிகளும்...
சிம்மங்கள் தாங்கிய முகப்பத்திர மடக்கையென...
எல்லையில்லா அழகு தொடுத்த...
சீரணிப் பதியின் நாகபூஷணித் தாயவளின்...
தேர் உலா காட்சி காண -எம்
அங்கமெல்லாம் கண்கள் வேண்டும்...
அழகுத்தாயே வருக..!!! வருக...!!! வருக...!!!



**இ.தவகுமாரன்,**
**(செயலாளர்),**
**இந்து இளைஞர்மன்றம்.**



**ம.வசீகரன், (பொருளாளர்)**
**இந்து இளைஞர் மன்றம்.**



**கு.தனபாலசிங்கம்,**
**(மூத்த உறுப்பினர்),**
**இந்து இளைஞர் மன்றம்.**

### தங்கரத தேரேறி....

அம்மாளே போற்றி போற்றி!
ஆரணித்தாயே போற்றி போற்றி!
சந்ததி காப்பவளே போற்றி போற்றி!
சாந்த சொரூபினியே போற்றி போற்றி!
சிரித்த முகத்தவளே போற்றி போற்றி!
சீரணித் தாயே போற்றி போற்றி!
சகலமும் எமக்கு நீயே!
நாகபூசணித்தாயே போற்றி! போற்றி!



**இ.சிறிதரன் (தலைவர்),**
**இந்து இளைஞர் மன்றம்.**


nd
dilipay
0
sa
nt
ns.

KIRUBA MOTORS
கிருபா மோட்டோஸ்
பிரான்பற்று வீதி, சங்கானை.

நியூ சண்முகானந்தா
ரெக்ஸ்ரைல்ஸ்
New Shanmuganatha
Textile
58, 23 பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3356

தினேஸ் வெதுப்பகம்
என்றும் ஒரே தரம்
POPPO ICE Cream Italian ICE

From:
ல்ஸ்
யல்
னை
க்கம்.
397

துர்க்கா மரக்காலை
Dealers in Timbers of All Kind of Furniture
Chavakacheri Road, Allayampathy,
Seerani Junction, Sandilipay.
077 711 4852

Yaso
Textile
Nelliyady.

AMBAL
Rice mill
அம்பாள் அரிசி ஆலை
காரைநகர் வீதி, சண்டிலிப்பாய்.
Karainagar Road, Sandilipay
T.P: 072 785 0550


தர்மகர்த்தா சபை,
சீரணி நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க தளங்கள் மீது மீண்டும் தாக்குதல்

## ஈராக் அமைப்பு தெரிவித்துள்ளது

(பக்தாத்)

சிரியாவில் உள்ள அமெரிக்க தளத்தின் மீது ரொக்கட் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள அதேவேளை ஈராக்கில் உள்ள தளங்கள் மீது தாக்குதலை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக ஈராக்கில் உள்ள ஆயுத குழுவொன்று தெரிவித்துள்ளது.

சிரியாவின் வட கிழக்கில் உள்ள அமெரிக்காவின் தளமொன்றின் மீது ஈராக்கின் ஜுமார் நகரிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கார்டியன் தெரிவித்துள்ளது.

பெப்ரவரிக்கு பின்னர் முதல்தடவையாக தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.பெப்ரவரி மாதத்தில் ஈராக் குழுக்கள் அமெரிக்க தளங்களின் மீது தாக்குதல்களை நிறுத்தியிருந்தன.

ஈராக்கிய பிரதமர் அமெரிக்காவிற்கு பயணம் மேற்கொண்டு அமெரிக்க இராஜாங்க செயலாளரை சந்தித்த மறு நாள் இந்த அறிவிப்பு வெளியாகியு ள்ளது.

இந்த பேச்சுவார்த்தையின் போது அமெரிக்க படையினரை ஈராக்கிலிருந்து வெளியேற்றும் விடயத்தில் முன்னேற்றம் ஏற்படாததை தொடர்ந்து மீண்டும் தாக்குதலை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக ஈராக்கின் ஹெட்டாய்க் ஹெஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது. (நி-6)

# 10 நிமிடங்களுக்கு ஒரு குழந்தை உயிரிழப்பு

## இஸ்ரேல் போரின் எதிரொலி



(காசா)

காசாவில் மோதலின் தாக்கம் காரணமாக ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கும் ஒரு குழந்தை உயிரிழப்பதாக பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

நாளாந்தம் பல்வேறு காயங்கள் மற்றும் சுகாதார பிரச்சினைகளால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருவதாக அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புகளைப் புறக்கணித்து, காசா பகுதியில் இஸ்ரேல் தொடர்ந்து நடத்தும் தாக்குதல்களால் குழந்தைகளின் வாழ்க்கை மிகவும் பாதுகாப்பற்றதாக மாறியுள்ளதாக அவர்கள் அறிக்கையில் காட்டியுள்ளனர்.

பாலஸ்தீன சுகாதார அதிகாரிகளின் கூற்றுப்படி, போரினால் 34, 049 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதாகவும், 76,901 பேர் காயமடைந்துள்ளதாகவும் வெளிநாட்டு செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன. (நி-6)

# நீரில் மூழ்கும் சீனா

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(பீஜிங்)

சீனாவின் சில முக்கிய நகரங்கள் நீரில் மூழ்கி வருவதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

வெள்ளம், மழை, கடல் மட்ட உயர்வு உள்ளிட்ட காரணங்களால் இவ்வாறாக சீனாவின் சில முக்கிய நகரங்கள் நீரில் மூழ்கும் அபாயத்தில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

சீனாவில் இந்த நிலை தொடர்ந்தால், பல மில்லியன் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

சீனாவின் முக்கிய நகரங்களில் உள்ள 45 நகர்ப்புற நிலப்பரப்பில் ஆண்டிற்கு 3 மில்லிமீற்றர் வரை நீரில் மூழ்குவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

தற்போது சீனாவில் உள்ள நகரங்களில் 900 மில்லியனுக்கும் அதிக மானவர்கள் வாழ்கின்றனர்.

இயற்கைப் பேரிடர்களால் சீனா ஆண்டிற்கு 1 பில்லியன் டொலர் இழப்பை எதிர் நோக்குகிறது.

அடுத்த நூற்றாண்டில் சீனாவின் கடலோரப் பகுதியில் உள்ள கால் பங்கு இடங்கள் கடல்மட்ட உயர்வால் பாதிக்கப்படலாம். இதனால் பல நெருக்கடிகளை சீனா சந்திக்கக் கூடும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. (நி-6)

# மாலைதீவு பாராளுமன்றத் தேர்தல்

## ஜனாதிபதி முய்சுவின் கட்சி அமோக வெற்றி

(மாலைதீவு)

நடைபெற்று முடிந்த மாலைதீவின் 20 ஆவது பாராளுமன்றத் தேர்தலில் அந்நாட்டின் ஜனாதிபதியான முகம்மது முய்சுவின் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற குறித்த தேர்தலில் ஜனாதிபதி முய்சுவின் கட்சியான மக்கள் தேசிய காங்கிரஸ் மொத்தமுள்ள 93 தொகுதிகளில் 66 இடங்களை வென்றுள்ளது.

இது பாராளுமன்றத்தில் 3 இல் 2 பங்காகும். இந்த வெற்றியைத் தொடர்ந்து முய்சு தனது சீன



ஆதரவு செயற்பாடுகளை அதிகரிப்பார் என எதிர் பார்க்கப்படுகின்றது. (நி-6)

# இன்று ஒரு தகவல் 103



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## சயாம் இரட்டையர்கள்

நாங்கள் இரண்டு பேரும் இணைபிரியாத நண்பர்கள்! ஈருடல் ஓருயிர் அப்படி பழகின்றோம். இப்படி சொல்லிக் கொண்டு இருக்கின்றவர்கள் நிறையப் பேர் உண்டு. இந்த உலகத்திலே! ஆனால் நிஜமாகவே இணைபிரியாமல் கடைசி வரைக்கும் வாழ்ந்தவர்கள் இரண்டு பேர் உண்டு. அவர்கள் தான் சயாம் இரட்டையர்கள்.

இவர்கள் ஏன் இணைபிரியவில்லை என்றால்... பிரிக்க முடியவில்லை! அவ்வளவு தான்! இவர்கள் பிறக்கும் போதே ஒட்டிப் பிறந்து விட்டார்கள். அறுவை சிகிச்சை செய்து இரண்டு பேரையும் பிரித்து விடலாம் என்று சில டொக்டர்கள் சொன்னார்களாம். இருந்தாலும் பெற்றவர்கள் இதற்கு சம்மதிக்கவில்லை. அறுவை சிகிச்சை செய்தால் உயிருக்கு ஏதும் ஆபத்தாகிவிடும் என்று பயம். சரி அப்படியே இருக்கட்டும் என்று விட்டு விட்டார்கள். ஒரு பக்கத்து மார்பிலே இரண்டு பேரும் ஒட்டிக்கொண்டே இருந்தார்கள். இரண்டு பேரையும் மார்பிலே இணைத்துக் கொண்டிருந்த தசைக்கு மேலே இருந்த இடை வெளி நாளுக்கு நாள் வளர்ந்து விட்டதாம். அதனாலே இரண்டு பேரும் ஒருத்தர் தோள் மேலே ஒருத்தர் கையைப் போட்டுக் கொண்டு நடக்க ஆரம்பித்து விட்டார்களாம்.

தாய்லாந்து நாட்டிலே பாங்கொக் மேற்கே 60 மைல் தூரத்திலே ஒரு கிராமம். அதன் பெயர் மெக்லாங். அங்கே மிதக்கின்ற படகிலே வசித்துக் கொண்டிருந்த மீனவத் தம்பதிகளுக்கு 1811 மே மாதம் 11 ஆம் திகதி பிறந்த இரட்டைக் குழந்தைகள் தான் இவர்கள்.அந்த அம்மாவுக்கு ஏற்கனவே நான்கு குழந்தைகள்! ஐந்தாவது பிரசவத்திலே இந்த இரட்டைப் பிள்ளைகள். இவர்களுக்கு பெயர் என்ன தெரியுமா? சங் பங்கர்! யங் பங்கர்!

இரண்டு பிள்ளைகள் இப்படி ஒட்டிக் கொண்டு பிறந்த விடயம் நாடு முழுவதுமாக பரவியது. சாயம் நாட்டு மக்கள் இதை ஒரு கெட்ட சகுணமாக நினைத்தார்களாம். அந்த நாட்டு ராஜாவுக்கு இது ஆகாது என்று கிளப்பி விட்டார்களாம். இப்படி ஒரு சகுண பீதியினாலே அவர்களை கொன்று விட வேண்டும் என்று கூட ஒரு யோசனை இருந்ததாம்.

நல்ல வேளை அப்படி ஒன்றும் ஆகவில்லை. இரண்டு பேரும் ஒட்டிக் கொண்டு இருந்தார்களே தவிர குணத்திலே வித்தியாசம் இருந்தது. முதலிலே இந்த உலகத்தை பார்த்தவர் சங் பங்கர். இவர் முன்கோபி.. முரட்டு சுபாவம்.

யங்பங்கர்-பரம சாது! அவர் என்ன செஞ்சாலும் இவர் பொறுத்துக் கொள்வார். ஒரு தடவை அவங்க இரண்டு பேருக்குமே சண்டை வந்திட்டுதாம். சங், யங்கை அடித்து காயப்படுத்தி விட்டாராம். தாயார் தான் வந்து சமாதானப் படுத்தி வைத்தாராம். இரண்டு பேருமே ஒருத்தரை ஒருத்தர் அனுசரித்து போக வேணும். அதைத் தவிர வேறு வழியில்லை என்பதை எடுத்துச் சொன்னார். அதற்குப் பிறகு அவர்கள் சண்டை போட்டுக்கொள்வது இல்லையாம்.

ஒரு ஆங்கிலேய வியாபாரி இவர்களைப் பார்த்தார்.இந்த அதிசய பிறவிகளை வைத்து கண்காட்சி நடத்தி பணம் சம்பாதிக்கலாம் என்று திட்டம் போட்டார். அவர்கள் அப்பா அம்மாகிட்ட கொஞ்சம் பணத்தை கொடுத்துவிட்டு அழைத்துக் கொண்டு போயிட்டார்.அமெரிக்காவிலே கண்காட்சி ஜே ஜேன்னு நடந்தது. அதற்குப் பின் லண்டன்-ஸ்காட்லாந்து-அயர்லாந்து இப்படி ஏகப்பட்ட ஊருக்குப் போனாங்க.

இவர்களை வைத்து மற்றவர்களுக்கு நல்ல வருமானம். 21 வயதுக்கு பின்.இவர்கள் சொந்தமாகவே கண்காட்சி நடத்தி நிறைய சம்பாதித்தார்கள்.

1839 ஒக்டோபர்- 12 ஆம் திகதி இரண்டு பேரும் அமெரிக்கா பிரஜையாகவே ஆகிவிட்டார்கள்.1843 இல் நடந்த ஒரு நிகழ்ச்சிதான் அமெரிக்காவையே ஆச்சரியப் படவைத்தது. ஆமாம்.இந்த இரட்டையர்கள் ஒரே சமயத்திலே இரண்டு பெண்களை கல்யாணம் செய்து கொண்டார்கள்.கல்யாணத்திற்கு முன்னாடி அறுவை சிகிச்சை செய்து பிரித்துடலாம் என்று நினைத்தார்கள். அப்படி செய்தால் உயிருக்கு ஆபத்து என்று டொக்டர்கள் சொன்னதாலே அந்த யோசனையை விட்டு விட்டார்கள்.இரண்டு பேருக்குமே புல்லாங்குழல் நன்றாக வாசிக்கத் தெரியுமாம்.

சங் பங்கர் சில சமயம் குடித்துவிட்டு உளறுவாராம்.யங்பங்கர் தலைவிதியேன்னு நினைத்து அதைக் கேட்டுக் கொண்டே உட்கார்ந்திருப்பாராம். தூங்க நினைத்தாலும் அவர் விடமாட்டாராம்.இப்படியே காலம் தள்ளியிருக்காங்க.

இரண்டு பேருக்கும் மொத்தம் 18 பிள்ளைகள் பிறந்ததும் தான். இந்த இரண்டு பேரிலே யார் முதலிலே இறந்தாலும் உடனே அந்த உடம்மை பிரித்து எடுத்துவிடவேண்டும்.இல்லை என்றால் அடுத்தவர் உயிருக்கும் ஆபத்து என்று டொக்டர்கள் சொல்லியிருந்தாங்களாம்.ஆனால் இந்த சயாம் இரட்டையர்கள் இறந்தது எப்பொழ்து எங்கே? அப்படி என்பது இன்றைவரைக்கும் யாருக்குமே தெரியாத ரகசியமா போய்விட்டது. அது போகட்டும். இப்பவும் கூட அது மாதிரி சில இரட்டையர்கள் உண்டு. ஒட்டிப் பிறக்கலைன்னா கூட ஒருத்தரை விட்டு ஒருத்தர் எப்பவும் பிரியாத அளவுக்கு நெருக்கமாக இருக்கிற சகோதரர்கள் உண்டு.

ஒரு ஊரிலே இப்படித் தான் இரண்டு பேர் இருந்தார்கள். இரண்டு பேரும் இரட்டை பிள்கைள். இரண்டு பேர் முகச் சாயலும் ஒரே மாதிரி இருக்கும். வித்தியாசமே தெரியாது. இரண்டு பேரும் மிகவும் நெருக்கம். அண்ணங்காரன் தம்பியை விட்டுப் பிரியவே மாடட்டான். எங்கே போனாலும் ஒட்டிக் கொண்டே கூடவே போவான்.அவ்வளவு பிரியமா உன் தம்பி மேலே? என்று கேட்டாங்க. அப்படி இல்லைங்க இவன் பாட்டுக்கு எல்லார் கிட்டையும் கடன் வாங்கி விடுகிறான். அவர்கள் எல்லாம் என்னை தேடிக் கொண்டு வந்துவிடுகிறார்கள். அதுதான் இவனை தனியா விடுவதில்லை அப்படி என்றான் அண்ணன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கே.சீ.சீ வெற்றிக்கிண்ணம்-2024

## பற்றீசியன்ஸ் கால் இறுதிக்கு தகுதி

கே.சீ.சீ வெற்றிக் கிண்ணத் தொடரின் 13 ஆவது போட்டி கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் பற்றீசியன்ஸ் அணி விக்டோறி அணியை 120 ஓட்டங்களால் வெற்றி பெற்று முதலாவது கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 30 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 261 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

இ.டிலக்ஸன் 117, பியட்றிக் 88 இவ்விரு வீரர்களின் இணைப்பாட்டமே (244) வெற்றிக்கு வழிவகுத்தது.

குறித்த இணைப்பாட்டம் 31 வருடமாக தொடர்ந்து நடைபெற்று வரும் தொடரின் சாதனையாக அமைந்துள்ளது.

றதீஸன்-14, வினுஷாந்-16 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். பந்துவீச்சில் விக்டோறி அணியை சார்ந்த கதியோன் 6 ஓவர்களில் 34 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளை கைப்பற்றினர்.



பியட்றிக் (88 ஓட்டங்கள்) E.டிலக்ஸன் (117 ஓட்டங்கள்)

முதலாவது விக்கற் இணைப்பாட்டம் 214 ஓட்டங்கள்

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்டோறி அணி 23.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

கின்துளன்-25, பிரணவன்-14, தேனுயன்-14, மாதுளன்-28, ஜங்கரன்-17, பிரணவன்-11, ஜே.பிரணவன்-13 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் பற்றீசியன்ஸ் அணியை சார்ந்த டானியஸ் 6 ஓவர்களில் 38 ஓட்டங்களை கொடுத்து 4 இலக்குகளையும் சாம் டிமுத் 5.3 ஓவர்களில் 21 ஓட்டங்களை கொடுத்து 4 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தமிழ்த் தேசிய மே நாள் ஏற்பாடுகள் குறித்து ஆராய்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கான தமிழ்த் தேசிய மே நாள் ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் மாவட்ட பொது அமைப்புகளுடனான கலந்துரையாடல் கிளிநொச்சி தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

இதன்போது எதிர்வரும் மே தினத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (நி-6)

# முதியவரின் சடலம் மீட்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் அணைக்கட்டு வீதி பகுதியில் உள்ள வீடு ஒன்றின் முன்னால் கடந்த வெள்ளிக்கிழமை முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டதையடுத்து குறித்த சடலம் மேலதிக விசாரணைகளுக்காக, உடற்கூற்று பரிசோதனைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

சடலம் மீட்கப்பட்ட பகுதியை முல்லைத்தீவு நீதிவான் நேரில் சென்று பார்வையிட்டதுடன் உரிய விசாரணைகள் மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கை இடுமாறும் கட்டளையிட்டுள்ளதுடன் உயிரிழந்தவரின் சடலத்தை உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சின்னராசா ( வயது -74) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த முதியவரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளது. (நி-6-315)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3097

Search for people, places and things

### இதழினி

வாழ்க்கையில் நாங்கள் கொஞ்சக் காலம் தான் விளையாடுவோம்



மீதி காலம் முழுவதும் வாழ்க்கை நம்மோடு விளையாடும்.

### சுஜி கிருஷ்ணா

தீடீர் என்று ஒரு நாள் முழுதும் சந்தோசமாக இருந்தாலும் பயமா தான் இருக்கு



அடுத்த நாளே ஏதாச்சும் ஒரு பிரச்சினையும் வந்துவிடுமோ என்று

### கஸ்மிகா

எல்லோரையும் மகிழ்வித்தேன்.. குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை நேர காலமின்றி என்னை பார்த்து இரசிப்பார்கள்...



ஒளி மங்கியது, குரல் கம்மியானது கடைசியில் குப்பையில் எறிந்து விட்டார்கள்.

### தமிழினி

வாழ்க்கையில் அடுத்தவன் நம்மை என்ன நினைப்பான் என்று யோசிக்காமல் இருந்தாலே



நமது வாழ்க்கை எப்போதும் சந்தோஷமாகத் தான் இருக்கும்

### நிக்சிகன்

நமது வாழ்க்கையில் விலைமதிப்பில்லாத பாடங்களைக் கற்றுத் தருவது



பசித்த வயிறும் பணமில்லாத வாழ்க்கையும் உடைந்த மனமும் தான்.

### யசோதா

சந்தோசம் மட்டும் ஒத்தையடி பாதையிலே மெதுவாக வருது



ஆனால் பிரச்சனை பத்து வழி சாலையிலே வேகமாக வருது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

462



இந்தக் கப்பலில் இளவரசர் இருப்பது இயலாத காரியம். அவசரப்பட்டு வந்து ஏறிவிட்டோம். தப்பிச் செல்வது எப்படி? கடல் ஓரத்தில் நின்று குனிந்து பார்த்தான். படகு போய்க் கொண்டிருந்தது. "படகுக்காரா! நிறுத்து!" என்று கூவிக் கொண்டு கடலில் குதிக்கப் போனான். அச்சமயம் ஒரு வஜ்ரத்தை நிகர்த்த கை பின்னாலிருந்து அவனுடைய குரல் வளையைப் பிடித்து ஓர் இழுப்பு ஒரு தள்ளு. வந்தியத்தேவன் கப்பல் தளத்தில் மத்தியில் வந்து விழுந்தான். அவனுக்கு உக்கிர ஆவேசம் வந்துவிட்டது. குதித்து எழுந்து அவனைத் தள்ளியவனது முகவாய்க் கட்டையில் ஓங்கி ஒரு குத்து விட்டான். அந்த ஆறு அடி உயரமுள்ள அராபியன் தனக்குப் பின்னால் நின்றவனையும் தள்ளிக்கொண்டு படார் என்று விழுந்தான்.

வந்தியத்தேவனுக்குப் பின்னால் பயங்கரமான உறுமல் சத்தம் கேட்டது. நல்ல சமயத்தில் திரும்பிப் பார்த்தான். இல்லாவிட்டால் அவன் முதுகில் கத்தி பாய்ந்திருக்கும். திரும்பிய வேகத்தோடு கத்தியைத் தட்டி விட்டான். அது 'டணார்' என்ற சத்தத்துடன் கப்பலில் விழுந்து, அங்கிருந்து தெறித்துப் பாய்ந்து, கடலில் விழுந்து மறைந்தது.

மறுகணம் வந்தியத்தேவனை நாலாபுறத்திலிருந்தும் பலர் வந்து பிடித்தார்கள். பிடித்தவர்கள் புரியாத பாஷையில் ஏதேதோ பேசிக் கொண்டார்கள். அவர்களுடைய தலைவன் அதிகாரக் குரலில் கட்டளையிட்டான். உடனே மணிக்கயிறு கொண்டு வந்து வந்தியத்தேவனுடைய கால்களையும் கைகளையும் கட்டினார்கள். கைகளை உடம்போடு சேர்த்துப் பிணைத்தார்கள் பின்னர் நாலு பேராக அவனைத் தூக்கிக் கொண்டு கீழ்த் தளத்துக்குப் போனார்கள். போகும் போதெல்லாம் உதைத்துத் திமிறி விடுவித்துக் கொள்ள வந்தியத்தேவன் முயன்றான். அந்த முயற்சி பலிக்கவில்லை. கப்பலின் அடித்தளத்தில் கொண்டு போய் அங்கே அடுக்கியிருந்த மரக்கட்டைகளின் மீது அவனைப் படார் என்று போட்டார்கள். அந்தக் கட்டைகளில் ஒன்றோடு சேர்த்துக் கட்டிவிட்டு மேலே சென்றார்கள்.

கப்பல் அப்படியும் இப்படியும் அசைந்து ஆடிற்று. கப்பல் தன் பிரயாணத்தைத் தொடங்கி விட்டது என்று வந்தியத்தேவன் அறிந்தான். கப்பல் ஆடியபோது மரக் கட்டைகள் அவன்மீது உருண்டு விழுந்தன. அவற்றை விலக்கிக் கொள்ள முடியாமல் அவனுடைய கைகள் கட்டப்பட்டிருந்தன.

இந்த முறை மட்டும் தப்பிப் பிழைத்தால் இனி அவசரப்பட்டு எந்தக் காரியமும் செய்வதில்லை. ஆழ்வார்க்கடியானைப் போல் ஆழ்ந்து யோசித்த பிறகே செய்ய வேண்டும் என்று வந்தியத்தேவன் மனத்தில் எண்ணிக் கொண்டான்.

அச்சமயம் பேய் சிரிப்பது போன்ற சிரிப்புச் சத்தம் அருகில் கேட்டது. வந்தியத்தேவன் மிகச் சிரமத்துடன் சற்று முகத்தைத் திருப்பிப் பார்த்தான். அங்கே மந்திரவாதி ரவிதாஸன் நின்று கொண்டிருப்பதைக் கண்டான். இதுவரை மந்திரவாதியின் முகத்தில் பாதியை மறைத்துக் கொண்டிருந்த துணி இப்போது நீக்கப்பட்டிருந்தது.

"அப்பனே! அந்தச் சோழர் குலத்துப் புலியைத் தேடிக் கொண்டு வந்தேன் புலி அகப்படவில்லை. ஆனால் வாணர் குலத்து நரியாகிய நீ அகப்பட்டுக் கொண்டாய்! அந்த வரைக்கும் அதிஷ்டந்தான்!" என்றான்.

மேற்கூறிய நிகழ்ச்சிகளில் வந்தியதேவன் படகில் ஏறிச் சென்ற வரையில்தான் இருந்தவர்கள் பார்த்தார்கள். மரக்கலத்திற்குள்ளே நடந்தது இன்னவென்பது படகோட்டிச் சென்றவனுக்கே தெரியாது. அவன் உடனே திரும்பிக் கரைக்கு வந்து சேர்ந்தான். சேனாதிபதி முதலியவர்கள் படகில் ஏறிக் கொண்டார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மது செய்த முட்டாள்தனம்

(நேற்றைய தொடர்ச்சி...)

இப்படியாக இருக்க மதுவின் நண்பர்கள் அவனை காண வீட்டிற்கு வந்தார்கள். முயல் இருக்கும் இடத்தை பார்த்து விட்டு என்னடா இப்படி அழுக்கான, உடைந்து போய் இருக்கும் நாய் கூண்டிற்குள் விட்டிருக்கிறாய். முதலில் முயலுக்கு நல்லதாக ஒரு கூண்டு வாங்கலாம் என்று ஒருவன் சொல்ல தச்சனை தேடி செல்கிறார்கள்.



இருப்பதிலே நல்ல மரக் கூண்டாக முயலுக்கு வாங்குகிறார்கள். தச்சரிடம் வீட்டுக்கு அனுப்புங்கள் நான் பணம் கொடுக்கிறேன் என்று சொல்ல அவரும் கொடுத்து அனுப்புகிறார். இப்போது முயலுக்கு உணவு வைக்கும் தட்டு ரொம்ப அழுக்காக பழையதாக உள்ளது. அது பெயர் போட்டு வெள்ளியில் வாங்கலாம் என்று இன்னொரு நண்பன் சொல்ல அதையும் வாங்கி வருகிறான். முயல் படுப்பதற்காக மெத்தை, அதை சுத்தம் செய்வதற்காக வாரம் ஒருமுறை ஆள் என அனைத்திற்கும் செலவு செய்ய வைக்கிறார்கள்.

நண்பர்கள் பேச்சை கேட்டு பணம் இல்லை என்பதை மறந்து எல்லாத்தையும் வீட்டிற்கு வர வைக்கிறான். வீட்டிற்கு வந்த பொருட்களின் விலை அவன் கையில் இருப்பதை தாண்டி அதிகமாக தேவைப்பட்டது. மனைவியிடம் கேட்க, மனைவி குடுக்க மறுத்துவிட்டாள்.

பின்னர் கடன் வாங்கி அதையெல்லாம் சரி செய்து அடுத்த போட்டிக்கு தயாரானான் மது. முயலை அழைத்து கொண்டு செல்ல, அவனது முயலுக்கு ஒரு பரிசுமே கிடைக்கவில்லை. அதிர்ச்சியான மதுவிற்கு துக்கம் தொண்டையை அடைத்தது. ஏன் பரிசுகள் கிடைக்கவில்லை என யோசித்து கவலையில் மூழ்கினான்.

அப்போது நண்பர்கள் வந்து, முயல் வெற்றி பெற்ற சான்றிதழ்களை கேட்க கொடுத்தான் மது. அதில் மிகவும் மோசமாக வளர்க்கப்படும் செல்ல பிராணி என்ற விருதை பெற்றுள்ளது இந்த முயல்.

மொத்தமாக அதிர்ச்சியான நண்பர்கள். நீ முட்டாள் தான் ஆனால் எந்த அளவுக்கு என்பதை இப்போதுதான் பார்க்கிறோம் என அவனை திட்டி சென்றனர்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.
– சிமன்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எல்லாத் தீர்மானங்களும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலா?

அதிகாரப் பகிர்வு என்று கேட்ட நாம் இன்று எங்களிடம் இருக்கக்கூடிய அதிகாரங்களை வெளியில் சிந்த விடாமல் நாமே வைத்திருக்கப் பழகிவிட்டோம்.

இதன் காரணமாக சேவைக்குரிய நிறுவனங்கள் எதையும் செய்யாமல் மௌனமாக உள்ளன.

தவிர, வட மாகாணத்தில் எதைச் செய்வதாக இருந்தாலும் அதனை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்க வேண்டிய கட்டாயத்துக்கு நிலைமை வந்துவிட்டது.

ஆம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானித்தால் மட்டுமே அதனை அமுலாக்க முடியும் என்பதாக ஏற்படுத்தப்பட்ட பிரமை அனைத்து அரச அமைப்புகளையும் ஸ்தம்பிக்க வைக்கலாயிற்று.

உண்மை. பொதுவில் இந்த நாட்டில் பொது மக்களின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் கட்டுமானங்களின்போது உரிய நியமங்களின் பிரகாரம் கட்டுமானப் பணிகளை நெறிப்படுத்துவதுமான மிகப்பெரும் பொறுப்பு உள்ளூராட்சி அமைப்புகளுக்குரியதாகும்.

இருந்தும் வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி அமைப்புகள் தம்பாட்டில் இயங்குவதில் கூட, கடும் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளன.

தவிர, அந்த அமைப்புகள் தாம் செய்ய வேண்டிய பணிகளைச் செய்வதில் இருந்து பின்வாங்குகின்றன என்பதுதான் உண்மை.

ஆம், வட மாகாணத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை சொல்லிமாளா.

நாய் வீதிக்குக் குறுக்காகச் சென்றதால், விபத்து ஏற்பட்டு உயிரிழந்தவர்கள் பலர்.

தவிர, நாயுடன் மோதி விபத்துக்குள்ளாகி எழுந்து நடமாட முடியாமல் கால் உடைந்து கை உடைந்து வருடக்கணக்கில் படுக்கையில் கிடப்பவர்களும் ஏராளம்.

ஆனாலும் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தவோ, நாய்களை வளர்ப்பவர்கள் உரிய சட்ட திட்டங்களுடன் வளர்ப்பதை உறுதி செய்வதிலோ உள்ளூராட்சி அமைப்புகள் எந்தக் கவனமும் செலுத்தவில்லை.

இதற்கும் அப்பால், தனியார் அமைப்புகள், தனியார் கல்வி நிறுவனங்கள், தனியார் நடத்துகின்ற வாகனத் தரிப்பிடங்கள் உள்ளிட்டவற்றில் இருக்கக்கூடிய வசதி வாய்ப்புகள் பற்றி உள்ளூராட்சி அமைப்புகள் பாராமுகமாக உள்ளன.

அதிலும் குறிப்பாக, தற்சமயம் நிலவக்கூடிய அதிகூடிய வெப்பநிலையில் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்கின்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காற்றாடி வசதிகள், அவர்கள் இருக்கக்கூடிய கொட்டகைகளின் கூரை அமைப்புகள், குடிநீர் வசதிகள் என்பனபற்றியெல்லாம் உள்ளூராட்சி அமைப்புகள் மேற்பார்வை செய்ய வேண்டும்.

இதை நாம் கூறும்போது, ஒவ்வொரு உள்ளூராட்சி அமைப்புகளும் தீர்மானிக்க வேண்டிய; கனரக வாகனங்கள் வீதியில் பயணிக்கக் கூடிய நேர ஒழுங்கைக்கூட, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கின்ற அளவிலேயே நம் நிலைமை உள்ளதெனும்போது என்னதான் செய்ய முடியும்.

# இந்தியா – இலங்கையிடையே தரை வழிப்பாதை அமைக்கும் பணி ஆரம்பம்-சந்தோஸ் ஜா

(கொழும்பு)

**இந்தியாவும் இலங்கையும் இணைந்து தரை வழிப்பாதை அமைப்பதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் தனியார் விடுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்தே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

இந்த தரைப்பாதை இரு நாடுகளுக்கிடையிலான சுற்றுலாவை மேம்படுத்த உதவும் என்பதோடு நாடுகளுக்கு இடையிலான உறவில் மாற்றத்துக்கான வழியை ஏற்படுத்தும்.

சுற்றுலாவை மேம்படுத்துவது இரண்டு நாடுகளின் முக்கிய நோக்கமாக இருப்பதாக குறிப்பிட்ட உயர்ஸ்தானிகர் இலங்கையைப் பொறுத்தவரை இது பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஒரு முக்கிய ஆதாரமாக இருந்து வருகிறது என அவர் தெரிவித்தார். (நி-6)

# மாணவர்களுக்கான போசாக்கு திட்டம்; தரமற்ற அரிசி இருப்புகள் கண்டுபிடிப்பு

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த தரமற்ற அரிசி கையிருப்பு தொடர்பில் இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தகவல் வெளியிட்டுள்ளது.

வெயாங்கொடை பிரதேசத்தில் உள்ள அரச உணவுக் களஞ்சியசாலையில் சேமித்து வைக்கப்பட்டுள்ள அரிசியே இவ்வாறு பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

பூச்சி சேதம் காரணமாக குறித்த அரிசி இருப்பு பாவனைக்கு தகுதியற்றதாக மாறியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த களஞ்சியசாலையில் இருந்த அரிசி பாடசாலை மாணவர்களின் போசாக்குத் திட்டத்திற்காக உலக உணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு, குறித்த களஞ்சியசாலையில் இருந்து அரிசி இருப்புக்களை விடுவிப்பது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# 11 நாட்கள் நடைபெற்ற விவாதத்திற்கு 13 கோடிக்கு மேல் செலவு

(கொழும்பு)

கடந்த மூன்று ஆண்டுகளில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக மட்டும் 11 விவாதங்கள் பாராளுமன்றத்தில் நடைபெற்றுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய விவாதத்துக்காக 11 நாட்கள் நடைபெற்ற கூட்டத்திற்காக 13 கோடியே இருபது இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இந்த நாட்டின்பாராளுமன்ற வரலாற்றில் ஒரே விடயம் தொடர்பில் அதிகளவான விவாதங்கள் இடம்பெற்றமை இதுவே முதல் முறை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான மற்றொரு மூன்று நாள் விவாதம் இந்த ஆண்டு ஏப்ரல் 24, 25 மற்றும் 26 ஆகிய திகளில் நடைபெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உச்சம் தொட்ட தேசிக்காய் விலை

(கொழும்பு)

வெப்பமான காலநிலை நிலவிவரும் நிலையில், இலங்கையில் எலுமிச்சம் பழத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக சந்தை நிலவரங்கள் தெரிவிக்கின்றன.

ஒரு கிலோகிராம் தேசிக்காயின் விலை 1,200 ரூபாவாக அதிகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் ஒரு கிலோகிராம் எலுமிச்சம் பழத்தின் விலை1,000 ரூபாய் முதல் 1,200 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர், ஒரு கிலோகிராம் எலுமிச்சம் பழத்தின் விலை, பாரிய அளவு குறைவடைந்திருந்ததாகவும் தற்போது சடுதியாக அதிகரித்துள்ளதாகவும் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவும் வறட்சியான வானிலையினால் எலுமிச்சம் பழத்தின் விலை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## நாட்டை விட்டு வெளியேறுவோர் உயர்வு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த இரண்டு வருடங்களில் இருபத்தைந்து இலட்சத்து அறுபத்து ஐந் தாயிரத்து முந்நூற்று அறுபத்தைந்து பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2022 ஆம் ஆண் டில் 311,269 பேர் வெளி நாட்டு வேலைகளுக்காகவும் கடந்த ஆண்டில் 297, 656 பேரும் வெளியேறி யுள்ளனர்.

2023ஆம் ஆண் டில் வெளிநாட்டு வேலைகளுக்காக வெளியேறியவர்களில் சுமார் எழுபது வீத மானவர்கள் தொழில் ரீதியாக உயர் தகைமை பெற்ற பொறியியலாளர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள் போன்றவர்கள் எனத் தெரிவித்த வசந்த அத்துகோரள, கடந்த வருடம் வெளிநாட்டு வேலைகளுக்குச் சென்றவர்களில் 34 வீதமானவர்கள் 25-34 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் வெளிநாடு சென்றவர்களில் 55 சதவீதம் பேர் ஆண்கள், 45 சதவீதம் பேர் பெண்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# உதைபந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி உதை பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்ட போட்டிகள் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து பலாலி விண் மீன் அணியும் பிற்பகல் 4.30 மணிக்குஅண்ணா சிலையடி யூத் அணியை எதிர்த்து தேவரையாளியங்லயன்ஸ் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796–1832)

பகுதி IV

16

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

கரையோர மாநிலங்களை ஆட்சி புரிந்த ஐரோப்பிய அரசாங்கங்களுக்கு 300 ஆண்டுகளாக பகைமை காட்டி வந்தவர்களும் தமது சுதந்திரத்தை பேணி பாதுகாத்து வந்தவர்களுமான கண்டியர் புது அந்நிய அரசாங்கத்தை ஏற்க கூடியவர்கள் அல்லர்.

இவ்வாறு 1815 இற்குப் பிந்திய ஆண்டுகளில் கண்டியின் சகல வகுப்பினர் மத்தியிலும் அதிருப்தி கொழுந்து விட்டெரிந்து கொண்டே வரலாயிற்று. அக்காலத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக ஒழுங்குள்ள சதித்திட்டம் ஒன்றும் உருவாகவில்லை. எனினும் எல்லோரும் ஒரேமுகமாக ஆங்கிலேயரைத் துரத்தி விட வேண்டுமென்ற ஒற்றுமையை ஏற்படுத்திற்று. எங்கும் அதிருப்தி குடிகொண்டிருந்த போதிலும் 1815 ஆம் ஆண்டு உடன்படிக்கை மூன்று ஆண்டுகளுக்குக் கண்டி நாட்டில் நிலைத்தது.

ஏனெனில் ஆங்கிலேயர் நாட்டை விட்டு நீங்கியவுடன் எகெலப்பொலை உடனடியாகக் கண்டியின் அரச பதவியைக் கைப்பற்றுவான் என்பதை பிரதானிகள் நன்கறிந்திருந்தனர். தவிரவும் பிரதானிகளின் பழைய பகைமைகள் வெளிப்பட்டவுடன் கண்டி இராச்சியம் ஒரு போர்க்களமாக மாறிவிடுமென அஞ்சினர். இதனாலேயே அவர்கள் தம்முள் ஒருவன் அரசனாவதை விடுத்து அந்நியரின் ஆட்சியைச் சகிக்க ஆயத்தமாயிருந்தனர். இவ்விதமாக உள்ளே குமுறிக்கொண்டிருந்த எரிமலை ஒரு சிறு சம்பவத்தினால் வெடித்த பொழுது அது பெரும் புரட்சியாக மாறிற்று.

### கண்டிக் கலகம்

1817-1818பெரும்கிளர்ச்சி அல்லது 1818 ஊவா-வெல்லச எழுச்சி அல்லது சுருக்கமாக ஊவாகிளர்ச்சி என்பது இலங்கையில் பிரித்தானியப் பேரரசுடன் நடத்தப்பட்ட கண்டிப் போர்களின் மூன்றாவது போரைக் குறிக்கும். இது அன்று கண்டி இராச்சியத்துடன் இருந்த இன்று ஊவாமாகாணம் என அழைக்கப்படும்பகுதியில் இடம்பெற்றது. இக்கலகம் 1817 செப்டெம்பரில ஊவாவில் ஆரம்பமானது. 1818 ஜனவரியில் கலகம் வெல்லசவிற்குப் பரவியது. மேல் நாட்டு சிங்களவர் என அழைக்கப்படும் உடரட்ட என்ற பகுதியைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ஆளுநர் ரொபர்ட் பிரவுன்ரிக் தலைமையிலான பிரித்தானியக் குடியேற்ற அரசுடன் இப்போர் இடம் பெற்றது.

1818ஆம் ஆண்டுக் கலகம் இலங்கை வரலாற்றில் ஒரு முக்கியத்துவமான கலகமாக கொள்ளப்படுகின்றது. இந்தக் கலகத்தை பிரித்தானியப் படையினர் அடக்கினாலும் கூட இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தில் ஒரு முக்கிய நிலையாகக் கொள்ளப்படுகின்றது. இக்கலகம் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதல் கலகமாகவும் கொள்ளப்படுகிறது.

**கலகத்தின் உடன் காரணம் :** வெல்லச எனும் பகுதியிலுள்ள சோனகர், பிரித்தானியப்படைகளுக்குச் செய்த சேவைகளுக்குக் கைமாறாக, தம்முள் அச்சிமரிக்கார் என்பவனைத் தமது பகுதிக்குத் தலைமைக்காரனாகப்பெற்றனர். இச்செயல். சிங்களப், பிரதானிகளுக்குப் பொறுமையையும் ஆத்திரத்தையும் உண்டு பண்ணிற்று.

ஏனெனில் பெரும் வர்த்தகரும் செல்வந்தருமான சோனகர் சிங்களப் பிரதானிகளுக்கு பரிசுகள், கைலஞ்சங்கள், திறைகள் மூலம் நல்ல வருமானத்தை ஈட்டிக் கொடுத்தவர்கள். புது நியமனத்தினால் இவையாவும் பறி போய்விடுமென அஞ்சிய சிங்களர், சோனகர் மேல் கொண்டனர்.

இந்நிலையில் 1817 செப்டெம்பர் மாதம், எவராலும் முன்பின் அறியப்படாத ஒரு பௌத்த பிக்கு, வெல்லசவுக்கு அண்மையிலிருந்த காட்டினில் தோன்றி, தானே கண்டி அரசனின் உறவினனென்று பிரகடனம் செய்தான். பதுளையிலிருந்த துணைத் ஸ்தானிகர் சில்வெஸ்டர் வில்சன், இதனைக் கேள்விப்பட்டு, வெல்லசவின் தலைமைக்காரனான அச்சிமரிக்காருக்குப் போலியுரிமைக் காரனைக் கைதுசெய்யுமாறு கட்டளையிட்டார்.

முஸ்லிம் தலைமைக்காரனைக் கண்டவுடன் சிங்களவர் சீறிச் சினந்து கோபாவேசம் கொண்டெழுந்து, அவனை அகப்படுத்தி அடித்து சிறையில் வைத்தனர். வில்சன், மரிக்காரை மீட்கத் தானே வெல்லசைக்குப் புறப்பட்டுச் சென்ற பொழுது, சிங்களர் வழியில் ஒழித்திருந்து அவனையும் அவனுடன் சென்ற மூன்று ஆங்கிலப் போர் வீரரையும் தம் அம்புக்கு இலக்காக்கிக் கொலை செய்தனர். இதனால் கலகம் கண்டி மாநிலம் எங்கும் பரவியது.

டி ஒயினி, கலகத்தை அடக்க ஊவாவின் திசாவையான கெப்பிற்றிப் பொலையைவெல்லசைக்கு அனுப்பினான். ஆனால் அங்கு சென்ற கெப்பிற்றிப்பொல சிங்கள மக்களின் மனோ நிலையையறிந்து, கலகக்காரருடன் ஒன்று சேர்ந்து தானே கலகத்துக்குத் தலைமை தாங்கச் சம்மதித்தான். அவன் கண்டி மாநிலங்களில் நிறைந்த செல்வாக்கும் மக்களின் மதிப்பையும் பெற்றவன்.

ஐரோப்பியர் கூட அவனது ஆளுமை, திறமை, நேர்மை எனும் அரிய இலட்சணங்களைப் போற்றிப் புகழத் தயங்கவில்லை. அவனுக்கு ஆதரவு நாலாபக்கங்களிலும் கிடைக்கவே, கலகம் முன்னொரு பொழுதும் காணாத ஒற்றுமையையும் உற்சாகத்தையும் சிங்களர் மத்தியில் ஏற்படுத்தியது. மொல்லிகொடை ஒருவனைத் தவிர, கண்டி மாநிலத்தின் பிரதானிகள் அனைவரும் அவனை ஆதரித்தனர்.

ஆங்கிலேயரின் நிலை மிகவும் கவலைக்குரியதாயிற்று. அவர்கள் இச்சமரில் தோல்வியடையவும் கண்டியினின்று துரத்தப்படவும் நேரிடுமோவென அஞ்சினர். இந்நிலையில் மக்டொனல்ட் என்ற ஆங்கிலத் தளபதி சிங்களவரை மற நெறியால் அடக்கத் திட்டமிட்டான். பருவ மழை காரணமாகவும், போக்குவரத்து வசதியின்மை காரணமாகவும் படைகளை உடனடியாக அனுப்பிக் கொள்ள பிரித்தானியருக்கு முடியவில்லை.

1818 பெப்ரவரி 21 இல், கண்டி நாட்டில் படைச்சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. ஆயுதம் தாங்கியோர் காணப்பட்ட இடங்களில் கொன்றொழிக்கப்பட்டனர். சிங்களரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அவர்களுடைய ஆடு மாடுகள், நிலபுலங்கள், வயல்கள், மரங்கள் யாவும் நாசஞ் செய்யப்பட்டன. யானைகளைக் கொண்டு பயிர்களை அழித்தனர் குளங்களைத் திட்டமிட்டுச் சிதைத்தனர். கெப்பிற்றிப்பொலாவைக் கைது செய்ய உதவி செய்பவனுக்கு 1000 பகோடாக்கள் வெகுமதி தருவதாக பிறவுண்றிக் அறிவித்தார்.

படிப்படியாக ஆங்கிலேயரின் நிலை சீர்பட்டு வந்தது. சென்னையினின்று படையுதவி வந்து சேர்ந்தது. மொல்லி கொடையின் விசுவாசத்தினால் கண்டிக்கும் கொழும்புக்குமிடையே இருந்ததொடர்புகள் ஆங்கிலேயருக்குப் பெரும் பாதுகாப்பையளித்தன. ஆயுதங்கள், துருப்புக்கள், உணவு யாவும் கண்டியை இலகுவாக வந்தடைந்தன. என்னும் போர் பல மாதங்களாக நடந்து வந்தது.

### கலகம் தோல்வியடைந்தமைக்கான காரணிகள்

கலகம் ஒழுங்கற்றதாக இடம் பெற்றமை, பிரித்தானியரால் கொடுமையான முறையில் அடக்கப்பட்டமை, கலகக்காரர்களிடம் சிறந்த தலைமைத்துவம் இல்லாமை, சில பிக்குகளினால் கடத்தப்பட்ட புனித தந்தத்தை பிரித்தானியர் மீட்டெடுத்தமை (தந்ததாது எவர் கையில் இருக்கிறதோ அவரே ஆளத்தக்கவர் என சிங்கள மக்கள் நம்பியமை), பிரதானிகளின் ஒரு பகுதியினர் பிரித்தானியருக்குத் தொடர்ந்தும் ஆதரவு அளித்தமை (உதாரணமாக: மொல்லிகொட)

1818 ஓகஸ்டில், கண்டியின் மேல் உரிமை பாராட்டியவன் ஒரு போலி மதகுரு எனஅறியப்பட்டதன் பின், பிரதானிகளினுடைய ஒற்றுமை சீர்குலைந்து பழைய பகைமைகள் மீண்டும் தலைதூக்கின. மடுகலையும் சில பிரதானிகளும் கெப்பிற்றிப்பொலாவுடன் விரோதம் கொண்டனர். உண்ண உணவின்றி, இருக்க இருப்பிடமின்றி துன்பப்பட்ட பாமர மக்களினது அக்கறை கலகத்தில் குன்றியது.

ஆங்கிலேயர், பிரதானிகளை ஒருவர் பின் ஒருவராகக் கைப்பற்றிச் சிறைப்படுத்தினர். 1818 ஒக்டோபர் 30 இல், ஆங்கிலத் துருப்புக்கள் கெப்பிற்றிப்பொலாவை அனுராதபுரத்துக்கு அருகாமையில் கைது செய்தனர். இரு நாட்களுக்குப் பின் மடுகலையும் சிறைப்படுத்தப்பட்டான். 1819 பெப்ரவரி 12 இல் படைச்சட்டம் நீக்கப்பட்டது.

கெப்பிற்றிப்பொலாவும் மடுகலையும் படை மன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு கொலைத் தண்டணை விதிக்கப்பட்டது. எகெலப்பொலையும் தலைவரும் மொரீஷஸ் தீவுக்கு நாடு கடத்தப்பட்டனர். எகெலப்பொலை அங்கு 1829 இல் தனது 59 ஆவது பராயத்தில் இறந்தான்.

1818 நவம்பர் 25 ஆம் நாள், கெப்பிற்றிப்பொலாவும் மடுகலையும் போகம்பரை குளத்துக்கு அருகாமையிலிருந்த கொலைக்களத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அவன் தன் முகத்தைச் சுத்தம் செய்து கொண்டையைத் தலையின் மேல் ஒரு முடிச்சாகக் கட்டி, மந்திரங்கள் ஓதி முடிந்தபின், கொலைக்காரன் ஒரு கூரிய வாளினால் அவனது சிரசைத் துண்டித்தான்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு 1951 நவம்பர் 26 ஆம் நாள், கண்டி மைதானத்தில் வீரபுருஷன் கெப்பிற்றிப்பொலாவின் ஞாபகார்த்தமாகக் கட்டப் பெற்ற சிலையில் அவனது மண்டையோடுசகல மரியாதைகளுடனும் அடக்கம் செய்யப் பெற்றது.

கண்டிக் கலகம் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திய பயங்கரச் சம்பவமாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சீரணி...

மண்டப பூசை இடம்பெற்று காலை 11 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோ கணிப்பார். (ம-7,10)

## ஆளுநரின்...

பொலிஸ் நிலையத்தில் பிரசன்னமாகி இருந்த ஆளுநர் அலுவலகக் கணக்காளர் அண்ணாமலை கலைச்செல்வன்; குறித்த ஆசிரியர் தலையங்கம் ஆளுநருக்கு எதிராகத் திட்டமிட்டு எழுதப்பட்டதெனக் கூறியிருந்தார்.

(ம-7,10)

## வட மாகாண...

கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி வலம்புரி நாளிதழில் வெளிவந்த **"வடக்கு மாகாண ஆளுநருக்கு ஓர் அவசர மடல்"**

என்ற ஆசிரியர் தலையங்கம் தொடர்பிலேயே ஆளுநரின் முறைப்பாடு அமைந்துள்ளது.

குறித்த முறைப்பாடு தனது சேவைக்கும் கௌரவத்துக்கும் பங்கம் ஏற்படுத்தியுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் அந்த முறைப்பாட்டில் பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் வலம்புரி பிரதம ஆசிரியர் நல்லையா விஜயசுந்தரம் அவர்கள் நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு அவரிடம் இருந்து வாக்குமூலம் பெறப்பட்டதுடன் விசாரணையும் இடம்பெற்றது.

விசாரணையின்போது, ஆளுநரின் பிரதிநிதியாக பிரஸ்தாப முறைப்பாட்டை யாழ்.பொலிஸ் நிலையத்தில் தாக்கல் செய்திருந்த வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் கணக்காளர் அண்ணாமலை கலைச்செல்வனும் அழைக்கப்பட்டிருந்தார். (ம-7,10)

## மூன்று வாகனங்...

கள் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பட்டானிச்சூர் அரச பாடசாலையினை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் மதியம் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் துரைச்சாமி லலிதராசா என்பவரே உயிரிழந்துள்ளார்.

வான், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவற்றில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-7,10,250)

## வலம்புரி...

னங்களைப் பதிவு செய்து கொள்கின்றது.

இது தொடர்பில் யாழ்.ஊடக அமையத்தால் வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையில்,

மக்களிற்கு சேவையாற்றவென அரச நிதியிலிருந்து சம்பளம் பெறுகின்ற எந்தவொரு அரச பணியாளரும் தமது சேவைகள் தொடர்பில் சமானியன் ஒருவனது விமர்சனங்களையும் கேள்விகளையும் எதிர்கொள்ள வேண்டியவர்கள் என்பது இரகசியமான தொன்றல்ல. அவ்வகையில் வடக்கு ஆளுநரும் அவரது நிர்வாக கட்டமைப்பும் விதிவிலக்காகவும் முடியாது.

இலங்கை போன்ற ஜனநாயக நாடொன்றில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை கழுத்தை நெரித்து தடுக்க ஆட்சியாளர்கள் கங்கணங் கட்டிக்கொண்டு செயற்படுவது தெரிந்த தொன்றே. அதிலும் சமூக ஊடகங்களை முடக்கிவிடவென இலங்கை அரசு அனைவரது எதிர்ப்புக்களிற்கும் மத்தியில் அமுல்படுத்தியுள்ள நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமூலத்தை மீளாய்வு செய்யுமாறு சர்வதேச சமூகம் தொடர்ந்தும் வலியுறுத்தியே வருகின்றது.

ஆனால் ஆட்சியாளர்களோ தேர்தல் வெற்றிக்கான கனவில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை முடக்கிவிட தொடர்ந்தும் முனைப்பு காண்பித்தே வருகின்றனர்.

இத்தகைய சூழலில் நல்லாட்சியொன்றை எதிர்பார்த்து தீட்டப்பட்ட ஆசிரிய தலையங்கமொன்றிற்கு எதிராக பொலிஸாரைப் பயன்படுத்தி நாளிதழ் ஒன்றின் ஆசிரியரை மிரட்டி அடிபணிய வடக்கு ஆளுநர் தனது அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளமை கேலிக்குரியதொன்றாகவே உள்ளது.

கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ள திராணியற்றதாகவோ அல்லது பாராட்டத்தக்க நிர்வாக கட்டமைப்பு ஒன்றினை தோற்றுவித்து பாராட்டு பெற்றுக்கொள்ளவோ வடக்கு ஆளுநர் தவறியே உள்ளமை இத்தகைய அச்சுறுத்தல் பாரம்பரியத்தினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ்த் தேசிய ஊடகத்துறை கடந்துவந்திருந்த பாதையொன்றும் மகிழ்ச்சிகரமானதாக கடந்த காலங்களில் இருந்திருக்கவில்லை. அது மரணங்களும் வலிகளும் நிரம்பியதாகவே இருந்திருந்தது.

வடகிழக்கு தமிழர் தாயகங்களில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் மீது கடந்த காலங்களில் அரச இயந்திரம் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகளால் 39பேர் தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு உயிருக்கஞ்சி வெளியேறிய இருண்ட நாட்கள் பற்றியெல்லாம் வடக்கு ஆளுநர் சிலவேளைகளில் அறிந்திருக்காதிருக்கலாம்.

ஆனால் அவற்றினையெல்லாம் தாண்டி பயணித்த ஊடக வரலாறு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் நாளிதழ்களிற்கும் பணியாற்றிய ஊடகவியலாளர்களிற்கு முள்ளதென்பதை மீண்டுமொரு முறை ஆளுநர் கவனத்திற்கு எடுத்துச் செல்ல விரும்புகின்றோம்.

ஊடகவியலாளர்களது மரணங்களிற்கு நீதி கோரிய கோவைகள் பலவும் இதே பொலிஸாரின் களஞ்சியங்களில் கிடப்பிலுள்ளமையும் இரகசியமானதொன்றல்ல.

அவ்வகையில் மக்கள் வரிப் பணத்தில் நல்ல [illegible] [illegible] வடமாகாண சபை வழங்கவேண்டுமென்ற எதிர்ப்பார்ப்பில் எழுதப்பட்ட ஆசிரிய தலையங்கங்களை தம்மை செம்மைப்படுத்த முன்வைக்கப்பட்டதொரு கருத்தாக கவனத்தில் கொள்ள வடக்கு ஆளுநர் தவறியமை நல்லாட்சி தொடர்பில் கேள்விகளையே எழுப்பி நிற்கின்றது.

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை முடக்கிய பின்னராக முன்னெடுக்கப்படும் எந்தவொரு நிர்வாக நடவடிக்கையும் சர்வாதிகாரத்தின் சின்னமாகப் பார்க்கப்படுமென்பதை மீண்டும் சுட்டிக்காட்டவிரும்புவதுடன் வலம்புரி நாளிதழுடன் யாழ்.ஊடக அமையம் தோள்கொடுத்து தொடர்ந்தும் பயணிக்குமென்பதை ஆணித்தரமாக மீண்டுமொரு முறை சொல்லிக் கொள்ள விரும்புகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.04.22
சீட்டிழுப்பு இலக்கம் 5453
G 6 8 9 1 8 2
அத சம்பத G 9 1 8 2
சீட்டிழுப்பு இலக்கம் 028

தன நிதானய
திகதி - 2024.04.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1483
F 12 20 28 51 F
33388

மெகா பவர்
திகதி 22/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1801
H 09 25 31 37 67
83237

லக்கி 7 VIP
திகதி 2024.04.22
சீட்டிழுப்பு இலக்கம் 0279
T 1 1 4 1 9 1 T

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3695
சீட்டிழுப்பு திகதி 22.04.2024
P 10 60 65 74
P 47314

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.22
சீட்டிழுப்பு இலக்கம் 0762
ரிஷபம் 02 06 11 57 ரிஷபம்
70188 05

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.04.2024 வெற்றி வாரம் 161 வர்ணம் ஊதா
D 9 8 0 5 6 2
17413 U
ரூ. 20,921,880.00

SUPER BALL
2427 ஊதா 22.04.2024 திங்கள்
08 11 52 56 X
63585
ரூ. 84,504,802.40

சனிதா
2024.04.22 வெற்றி வாரம் 4588
31 40 43 54 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,591,136.00
43205

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4139 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.22 தினம் திங்கட்கிழமை
05 08 40 50 கும்பம்
ரூ. 4,811,080.40
528034

Q 35 11 12 22 74
1603 பச்சை 22.04.2024 திங்கள்
908811
518,701,784.20

ஜயோதா Jayoda
2024.04.22 வெற்றி வாரம் 2018
05 51 59 66 I
ரூ.23,075,724.80
57861

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2253
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.107,669,182.40
2024.04.22
15 33 66 67 V
606434

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்காரவேலன் சிவகாயத்ரி சுவர்க்கவாயில் சந்நிதானம்



## சித்திரா பௌர்ணமி உற்சவ விஞ்ஞாபனம்

மெய்யடியார்களே!

வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய வளாகத்தின் ஈசான பாகத்தில் அமைந்துள்ள சிங்காரவேலன் சிவகாயத்ரி சந்நிதானத்தில் சித்திரா பௌர்ணமி உற்சவம் இன்று சிறப்பாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**உற்சவ விபரம்**

**கும்ப பூஜை - அதிகாலை 5.30**

**மூலஸ்தான பூஜை - காலை 6.30**

தொடர்ந்து பிதிர்களுக்கான தர்ப்பண வழிபாடுகள் நடைபெறும். காலை 8.00 மணி தொடக்கம் சித்திரைக் கஞ்சி வழங்கப்படும்.

மாலைப்பூஜை பிற்பகல் 4.30, தொடர்ந்து பௌர்ணமி பூஜை வழிபாடும், சுமங்கலி பூஜையும் இடம்பெறும். பூஜை நிறைவடைந்ததும் அடியவர்களுக்கு இரவு உணவுதானம் வழங்கப்படும்.

உபயம் : திரு.திருமதி
**சிறிகுமார் துஸ்யந்தினி குடும்பம்** (U.K)

இங்ஙனம்
**கலாநிதி ராஜஸ்ரீ சிவகமல்ராஜ்**
**முதன்மை பிரதம குருவும் ஆதீன கார்த்தாவும் மேற்படி தேவஸ்தானம்**

(C-0190)

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (530)

**074 17 37 684**

## பணவீக்கம் வீழ்ச்சி

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பிரகாரம் 2024 பெப்ரவரி மாதம் 5.1 சதவீதமாக பதிவு செய்யப்பட்டிருந்த இலங்கையின் பணவீக்கம் 2024 மார்ச் மாதத்தில் 2.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை உணவு பணவீக்கம் தொடர்ந்தும் 5 சதவீதமாக காணப்படுவதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், கடந்த பெப்ரவரி மாதம் 5.1 சதவீதமாகக் காணப்பட்ட உணவு அல்லாத பணவீக்கம், மார்ச் மாதத்தில் 0.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. (ம-7,10)

## வேலைவாய்ப்பு

யாழ் நகர் மத்தியில் இயங்கும் பிரபல Fancy Shop ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

- பகுதி நேர வேலைவாய்ப்பு வசதியும் உண்டு.
- EPF/ETF வசதிகளும் உண்டு.

**075 762 2092**

(19069)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- ✓ சம்பளம் - 25000 /= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-0192)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## V2 VISA SERVICES

**கனடா** Visit Visas

077 77 20 322
077 77 19 322

Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0192)

## மெசின் கல்லு அடிக்கும் வேலையாள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் யாட் ஒன்றுக்கு மெசின் கொங்கிறீட் கல்லு அடிக்கும் வேலையாள், வேலித்தூண் அரியும் வேலையாள் தேவை. தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்.

**T.P : 077 940 0963**

(C-0193)

## புதுக்கடை திறப்பு விழா

# RANA ELECTRONICS

Dealers in Electronics & Electrical.

## யாழ் மண்ணில் புதுப் பொழிவுடன்




யாழ் மண்ணில் எலக்ரோனிக்ஸ் பொருட்களின் விற்பனையில் மக்களின் நன் மதிப்பைப் பெற்ற நிறுவனத்தின் புதிய காட்சியறையில் நாளை முதல் குறைந்த விலையிலும் உத்தரவாதத்துடனும் பொருட்களை பெற்றுக் கொள்ளமுடியும்.

**Wednesday - April 24th**

அன்றைய தினத்தில் சிறப்பு அதிரடி விலைக் கழிவுகளும் உண்டு...

No.92 Stanley Road Jaffna. 021 222 5105

(537)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org